விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 012 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 16 புதன்கிழமை (31.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நஷ்டஈடு கேட்கவில்லை உரிய தீர்வைக் கேட்கிறோம்

### தையிட்டி காணி உரிமையாளர்கள்




(யாழ்ப்பாணம்)

தையிட்டிக் காணி விவகாரம் தொடர்பில் மாற்றுக் காணியையோ நஷ்டஈட்டையோ கேட்க 15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி பொதுமக்களுடையது

### அதனை மீள வழங்குங்கள் யாழ்.நாக விகாராதிபதி கோரிக்கை




(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி பொது மக்களுடையது. அதனை அந்த மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு. அதனை நான் அரசாங்கத்திற்கும் கூறி 15ஆம் பக்கம் பார்க்க

# தையிட்டி விகாரை சட்டவிரோதம் என தீர்ப்பளித்தால் அதனை ஏற்கத் தயார்

## பிரச்சினை தீர்க்கப்படும் வரை புதிய கட்டுமானங்கள் இல்லை

### தையிட்டி திஸ்ஸ விகாராதிபதி உறுதி




(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை சட்டவிரோதம் என நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அதனை ஏற்கத் தயார். மேலும் தையிட்டி விகாரைப் பிரச்சினை தீர்க்கப்படும் வரையில்விகாரைவளாகத்தில்எவ்விதமானபுதியகட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம் என தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேரர் உறுதியளித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தாழையடிக் கடலில் காணாமல்போன இளைஞன் நேற்று சடலமாக மீட்பு



(கரணவாய்)

யாழ்.வடமராட்சி கிழக்கு தாழையடி கடலில் காணாமல்போன பிரபல உதைபந்தாட்ட வீரரான இளைஞரின் சடலம் நேற்று (30) அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. 04ஆம் பக்கம் பார்க்க

## மறுக்கப்படும் உரிமைகளை அடைய தொடர்ச்சியாகப் போராட்டம் செய்வோம்

### வவுனியாவில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் உறவுகள்




(வவுனியா)

மறுக்கப்படும் எமது உரிமைகளை அடைய தொடர்ச்சியாகப் போராட்டம் செய்வோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் வலிந்து 15ஆம் பக்கம் பார்க்க

## பிரதேச சபை உறுப்பினர் யாழில் கஞ்சாவுடன் கைது



15ஆம் பக்கம் பார்க்க

## 3 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு அருகே 3 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது செய்யப் 15ஆம் பக்கம் பார்க்க

## அரசியலமைப்பு சபை எல்லை மீறியுள்ளது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதில் அரசியலமைப்பு சபை குறுகிய நோக்கங்களின் அடிப்படையில் தனது எல்லையை 04ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நெறிகாக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாட்கள் தேவை**

கோண்டாவிலில் உள்ள பலசரக்குக் கடைக்கு வேலையாட்கள் தேவை.

- தங்குமிட வசதியுண்டு.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- பகுதி நேர வேலைவாய்ப்புமுண்டு.

(6439)

**077 590 9501**
**077 831 2284**

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, சுவாட்ஸ்லேனில் 5 அறைகளுடன் தனித் தனி குளியலறைகளுடன் கூடிய மேல்தளத்தில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. (அலுவலக பாவனைக்கு உகந்தது)

(C-4699)

**077 148 4540**


# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 1936.01.08 — மறைவு 2025.12.28

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **அப்பாத்துரை பஞ்சலிங்கம்**

(யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி; யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர்)


அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீமங்களமகாகாளிஅம்மனைப்பிரார்த்திக்கின்றோம்

இல. 11/3, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

(6438)

கொக்குவில் - குளப்பிட்டி, அருள்மிகு ஸ்ரீ மங்கள மகா காளி அம்மன்தேவஸ்தானம்.

# கொக்குவில் இந்து அன்னையின் முதுசம் ஒன்று காற்றோடு கலந்து விட்டது.



கொக்குவில் இந்து அன்னையின் புகழ் பூத்த மைந்தனாய், அதிபராய், பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவராய் இருந்து தான் தவழ்ந்து திரிந்த அன்னையினை மெருகூட்டுவதற்காக ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் அணையாத தீபமாய் திகழ்ந்த

(C-4708)

உயர்திரு. **அப்பாத்துரை பஞ்சலிங்கம்**


அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்க தாய்ச் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

# அஞ்சலிகளை ஏற்றுச் செல்க ஐயா!

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் புகழ் பூத்த அதிபர்

உயர்திரு **அப்பாத்துரை பஞ்சலிங்கம்**



அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் பாதார விந்தங்களை பணிகின்றோம்.

1994ம் ஆண்டு உயர்தர மாணவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

# 29 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



தாயின் மடியில் 31 - 12 - 1996

நோயின் பிடியில் 31 - 08 - 2016

**வெற்றிவேலு பிரசாந்தி**

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, க.பொ.த. உயர்தரம் (கணிதப்பிரிவு) - 2015))

மௌனமாகிப் போன உன் குரல்
இன்றும் எம் உள்ளத்தில் பேசுகிறது
காணாமல் போன உன் நிழல்
எம் நாட்களைத் தொடர்ந்து வருகிறது.
காற்றோடு கலந்தாய்
மண்ணோடு உறங்கினாய் ஆனால்
எம் இதயத்தில் மட்டும்
என்றும் உயிராய் வாழ்கிறாய்
நீ இல்லாத உலகம்
வெறுமையாய் தோன்றினாலும்
நினைவாய் மாறி
எங்களுடன் வாழ்கிறாய்


விண்ணுலகில் வாழும் எங்கள் கடைக்குட்டிச் செல்வத்திற்கு கண்ணீரில் நனைந்த பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

"பிரசாந்தி வாசா" எல்லை ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

(C-4709)

பிரிவால் துயருறும்.. குடும்பத்தினர் 077 988 2521

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு 08.01.1936 — உதிர்வு 28.12.2025

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர்

**அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம்**

காற்றோடு கலந்த சுவாசம்...
கண்ணீராய் வடிந்த பாசம்...
உலகினைக் கடந்து போனாலும்...
ஓர் நல்ல மனிதனை...
உங்களோடு பயணித்தவர்கள்...
மறந்து போவார்களா.....?

(C-4707)

இல.378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

கனகசபை தர்மகுலசிங்கம், பழமுதிர்ச்சோலை, காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்லியல் சட்டம், கொள்கையை மாற்றாது உபதேசம் செய்வதால் பயனில்லை

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு



**(யாழ்ப்பாணம்)**

**எவருக்கும் கட்டுப்படாத இன முரண்பாடு களையும் பௌத்த சிங்கள பேரினவாத்தினையும் விஸ்தரிக்கும் திணைக்களமாகவே தொல்லியல் திணைக்களம் காணப்படுகின்றது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியகராசா நிரோஷ் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கோட்டை பகுதியில் தொல்லியல் திணைக்களம் கல் தூண்களை நடுவது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரன் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் தொல்லியல் திணைக்களத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்ட உத்தியோகத்தரை கடுமையாக சாடினர்.

இந் நிலையில் கருத்து தெரிவித்த பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு தொல்லியல் சட்டத்தில் மாற்றத்தினைக் கொண்டு வாருங்கள். அதற்கு உங்கள் அரசாங்கத்திற்கு முழு பலமும் பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது. அதனை நீங்கள் செய்யாது தொல்லியல் திணைக்கள சாதாரண உத்தியோகத்தர்களை மாவட்ட அபிவிருத்திக் குழுவில் அழைத்து எச்சரிப்பது தீர்வல்ல. என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், தொல்லியல் திணைக்களம் எவருக்கும் கட்டுப்படாததாக இன முரண்பாடுகளையும் பௌத்த சிங்கள பேரினவாதத்தினை விஸ்தரிக்கும் திணைக்களமாகவே உள்ளது. வரலாற்று ரீதியில் தொல்லியல் திணைக்களத்திற்கு நாட்டில் அளிக்கப்பட்டுள்ள மிகவும் மிலேச்சத்தனமான சட்டங்களின் வாயிலாக திட்டமிட்ட பௌத்த பேரினவாத அணுகுமுறை முன்னெடுக்கப்படுகின்றது. இதனால் சட்டங்களின் வாயிலாகவும், சுற்றுநிருபங்களின் வாயிலாகவும், அரச கொள்கைகளின் வாயிலாகவும் தொல்லியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆக்கிரமிப்புக்களைச் செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதே உண்மை.

இதனைத் தடுப்பதற்கு பாராளுமன்றில் மிகப் பெரும்பான்மை உள்ள அரசாங்கம் பொறுப்புடன் இன முரண்பாடுகளை விளைவிக்கும் சட்டங்களையும் சுற்றுநிருபங்களையும் அரச கொள்கைகளையும் மாற்றவேண்டும் என மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# இலங்கையில் சமய நல்லிணக்கம்; வலுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்

(கொழும்பு)

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவியை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்றூ பற்றிக் உத்தியோகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினார்.



இந்த சந்திப்பின் போது, இலங்கையில் சமய நல்லிணக்கத்தை வலுப்படுத்துவது மற்றும் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக விரிவான மற்றும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மதங்களுக்கிடையிலான பரஸ்பர புரிதலை ஊக்குவிப்பது, கலாசார பரிமாற்றங்களை அதிகரிப்பது மற்றும் பல்வகை சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துவது குறித்து இரு தரப்பும் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டன.

இந்த சந்திப்பு, இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் இடையிலான சமய - கலாசார ஒத்துழைப்பை மேலும் உறுதிப்படுத்தும் ஒரு முக்கியமான கட்டமாகும் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (நி)

# டித்வா சூறாவளியால் சுகாதாரத் துறைக்கு 21 பில்லியன் ரூபா இழப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

டித்வா சூறாவளியின் தாக்கத்தால் இலங்கையின் தேசிய சுகாதார அமைப்பு சுமார் 21 பில்லியன் ரூபா இழப்பைச் சந்தித்துள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பல வைத்தியசாலைகள் உட்பட எட்டு சுகாதார நிறுவனங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும், அவற்றை மீண்டும் நிர்மாணிக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக வங்கியின் கூற்றுப்படி, நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட சேதம் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ குறிப்பிட்டார். (3)

# சிறைச்சாலை மருத்துவமனையில் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, அவர் மஹர சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்தார். (நி)




# அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இலங்கை வரும் ஐ.எம்.எப் பிரதிநிதிகள்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

ஐ.எம்.எப் ஆல் வழங்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வினை பற்றி விவாதிப்பதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வு ஏற்கனவே நிறைவடைந்துள்ளது. மேலும் ஒப்புதல் வழங்குவதற்காக ஐ.எம்.எப் நிர்வாகக் குழு டிசம்பர் 15 அன்று முதலில் கூட திட்டமிடப்பட்டது. எனினும், விரைவான நிதியுதவிக்கான இலங்கையின் கோரிக்கையைத் தொடர்ந்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. (நி)



# ஜோன்ஸ்டனின் மகன் கைது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் நிதி குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி உள்ளிட்ட பல வாகனங்களை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# ஆறு புதிய சிலந்தி இனங்கள் இலங்கையில் கண்டுபிடிப்பு!

(கொழும்பு)

பெரும்பாலும் ஆராயப்படாத வன வாழ்விடங்களில் பல ஆண்டுகளாக களப்பணியின் பின்னர், ஆராய்ச்சியாளர்கள் இலங்கை தீவிற்குச் சொந்தமான ஆறு புதிய சிலந்தி இனங்களை அடையாளம் கண்டுள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்புகள் தெற்காசியாவில் சிலந்தி பன்முகத்தன்மை பற்றிய புரிதலை மேம்படுத்தும் என்றும், சிலந்தி விலங்கினங்கள் பற்றிய பரந்த பிராந்திய அறிவுக்கு பங்களிக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 கோல்களை அடிக்கும் வரை ஓய்வு இல்லை - ரொனால்டோ அதிரடி!

கால்பந்து அரங்கில் 1000 கோல்கள் அடித்து சாதிக்கும் வரை ஓய்வுபெறப் போவதில்லை என கால்பந்து வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

டுபாயில் நடந்த குளோப் சாக்கர் விருது விழாவில் மத்திய கிழக்கு நாடுகளின் சிறந்த வீரராக ரொனால்டோ தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், 1000 கோல்கள் இலக்கை எட்டும் வரை ஓய்வுபெறப் போவதில்லை "காயம் ஏற்படாத பட்சத்தில் 1000 கோல்கள் என்ற இலக்கை கண்டிப்பாக எட்டுவேன்.



தொடர்ந்து விளையாட ஆர்வமாக உள்ளேன், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா என உலகின் எந்தப் பகுதியில் போட்டிகள் நடந்தாலும் மகிழ்ச்சியுடன் கால்பந்து விளையாடுவேன்.

கோல் அடிப்பது மற்றும் கிண்ணம் வெல்வது என கால்பந்து பயணத்தைத் தொடர விரும்புகின்றேன்.

1000 கோல்கள் என்ற கனவு எண்ணை எட்டுவதே என் இலக்கு என்பது ரசிகர்களுக்குத் தெரியும் என அவர் தெரிவித்துள்ளார். (3)


# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் சிறுப்பிட்டி மத்தியில் சமுர்த்தி வீதியில் (வாங்கி வீதியில்) 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ◆ தார்றோட் முகப்புடன் இரண்டு பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- ◆ பரம்பரைக்காணி, 1951ம் ஆண்டு உறுதி, தோம்பு யாவும் உண்டு.
- ◆ வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலை அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ◆ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- ◆ செம்மண் தரை, நன்னீரூற்று, அமைதியான சூழல்.

(6435)

**ஒரு பரப்பின் விலை : பதினைந்து இலட்சம் (1500,000/=)**

தொடர்புகளுக்கு: **076 763 8141, 076 765 8176**


## பகிரங்க மீன் ஏல அறிவித்தல் - 2026

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொதுச் சந்தைகளை 2026.01.08ஆம் திகதி தொடக்கம் 2026.12.31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீன் ஏலம் கோரப்படுகின்றது.

**இடம்** : தலைமை அலுவலகம்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

**திகதி** : 2026.01.07 (புதன்கிழமை)

**நேரம்** : மு.ப.10.00 மணி

| இல | விபரம் | மீளளிக்கப் படாத ஏல வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|
| பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச்சந்தை | 500.00 | 6,000,000.00 |
| பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | |
| 1 | இளவாலை பொதுச்சந்தை | 500.00 | 120,000.00 |

1. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையையும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம் ரூபா. 500.00 இனை எமது சபை தலைமை அலுவலகத்தில் 2026.01.07ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
2. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
3. பிரதேச சபையின் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
4. ஏலம் சம்மந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய்.**

C-4710

## தையிட்டி...

தையிட்டி விகாரையில் உள்ள விகாராதிபதியின் வாசஸ்தலத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டியில் திஸ்ஸ விகாரையில் எதிர்வரும் 03ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் வழமையான பூஜை வழிபாடுகள் தான் நடைபெறும். விசேட பூஜை வழிபாடுகள் எதற்கும் விகாராதிபதியாக நான் இடமளிக்கவில்லை.

தெற்கில் இருந்து புத்தர்சிலை எடுத்து வருவதாகவும், அன்றைய தினம் விசேட பெரஹரா நடைபெறவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் நான் எவ்வாறான விசேட அனுமதியும் எதற்கும் கொடுக்கவில்லை.

அரசியல் நோக்கத்திற்காக குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் எனக் கோருகிறேன்.

அதேவேளை தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள என அரசாங்கத்தால், புதிய குழு அமைத்துள்ளார்கள்.

அந்தக் குழுவிடம் எமது விகாரைக்கான ஆவணங்களைக் கையளித்துள்ளோம். அதேபோன்று காணியை உரிமை கோரும் நபர்களும் தமது காணி தான் என்பதற்கான ஆவணங்களைக் கையளித்துள்ளார்கள்.

இந்த விவகாரத்தில் இதொரு சட்டவிரோதச் செயல் என நீதிமன்றால் தீர்ப்பளிக்கப்பட்டால் இதனையும் ஏற்க நான் தயார்.

விகாரை காணி விடுவிப்புத் தொடர்பில் இதுவரை யாரும் என்னுடன் பேசவில்லை. அரசாங்கத்தின் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு மதிப்பளித்து விகாரை வளாகத்தில் எவ்விதமான புதிய கட்டுமானங்களையும் மேற்கொள்ள மாட்டோம் என உறுதியளிக்கிறேன் என்றார். (ம-7,33)

## காணாமல்...

உடுத்துறையைச் சேர்ந்த 27 வயதுடைய ஜெசிந்தன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞன் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தனது நண்பர்களுடன் கடலில் நீராடுவதற்காகத் தாழையடி கடற்கரைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது, கடல் பகுதியில் நிலவும் சீரற்ற காற்று மற்றும் கடல் கொந்தளிப்பால் இந்த இளைஞன் கடலோடு அடித்துச் செல்லப்பட்டிருந்தார்.

இரு நாட்களாக இளைஞனைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில்,

நேற்று அதிகாலை குறித்த இளைஞனின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,60,104)


# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378,**
**076 097 3127**


## அரசியலமைப்பு...

மீறி செயற்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாகக் கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாக உள்ளமை தொடர்பில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்று (30) நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட நபர்களின் பெயர்களை 4 சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் "யாராலும் இதைச் சவாலுக்கு உட்படுத்த முடியாது. ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக்கு அமைய தகுதியுள்ள நபர்களையே ஜனாதிபதி இவ்வாறு பெயரிட்டு அனுப்பியுள்ளார். இவர்கள் அனைவரும் பட்டயக் கணக்காளர்கள். நிரந்தரக் கணக்காய்வாளர் நாயகம் பதவிக் காக ஜனாதிபதி இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு வேட்புமனுக்களைச் சமர்ப்பித்தார்.

இவர்கள் அனைவரும் தகுதியுள்ளவர்கள் மற்றும் அரசியலமைப்பால் கோரப்படும் அளவுகோல்களுக்குப் பொருத்தமான நபர்கள். அத்துடன் மேலும் இரண்டு பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவர்கள் கணக்காய்வுத் திணைக்களத்தில் தற்போதுள்ள சிரேஷ்ட கணக்காய்வு அதிகாரிகள்.

இவ்வாறான பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அரசியலமைப்பு சபை அதற்கமைய செயற்படவில்லையென்றால், இந்த அரச இயந்திரத்தை அல்லது அரச இயந்திரத்தின் செயற்பாடுகளைச் சீர்குலைக்க அவர்கள் வேண்டுமென்றே செயற்படுகிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

அனுப்பப்படும் பெயர்கள் அரசியலமைப்பிற்கு இணங்க பொருத்தமானதாக இருந்தால், அந்த நபர் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு தகுதியானவராக இருந்தால், அவருக்குப் பதிலாக வெளியில் சிறந்த ஒருவர் இருக்கிறார் என்று கூறி அந்தப் பெயர்களை நிராகரிப்பதற்கு அரசியலமைப்புச் சபைக்கு உரிமை கிடையாது.

ஜனாதிபதிக்கு அரசியலமைப்பின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரம் உள்ளது. அதற்கமையவே ஜனாதிபதி இதுவரை செயற்பட்டுள்ளார். அதேபோல எதிர்காலத்திலும் செயற்படுவார். அரசியலமைப்பு சபைக்கு நாம் கூறுவது என்னவென்றால், உங்களுக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க செயற்படுங்கள் என்பதாகும். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது குறித்து சிந்தித்துச் செயற்படுங்கள். உங்களது குறுகிய எல்லைகளுக்குள் செயற்படுவது பொருத்தமானதல்ல என்றார். (ம-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மணி விழா வாழ்த்துக்கள்



## திரு. நடராசா கருணாகரன்

BA(Hons), PGDE, MED, PGDM, DSM,SLPS-I

*Congratulations!*



- 01.01.1994–01.09.1994
  அபிவிருத்தி உத்தியோகத்தர் – கச்சேரி
- 03.10.1994–10.09.1999
  ஆசிரியர் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்
- 11.09.1999–07.01.2003
  சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ISA)– துணுக்காய் வலயம்
- 08.01.2003 - 28.02.2007
  அதிபர் – மு/முத்தையன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- 01.03.2007 - 11.01.2016
  அதிபர் – மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்
- 12.01.2016 - 18.11.2022
  அதிபர் – மு/கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
- 19.11.2022 - 30.11.2025
  அதிபர் – மு/விசுவமடு மகா வித்தியாலயம்

எமது பாடசாலையில் அதிபராக உன்னத சேவையாற்றி 30.11.2025 அன்று ஓய்வு பெற்ற எமது அதிபர் நடராசா **கருணாகரன்** அவர்கள் சகல நலன்களுடனும் சிறப்பாக வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்–

பாடசாலைச் சமூகம்,
மு/விசுவமடு மகா வித்தியாலயம்.

(C-4705)



# மார்கழிமாதம் முழுவதும் வழிபாட்டுக்கு சிறந்த அருள்மிகு காலமாகும் - 31.12.2025

**போற்றியென் வாழ்முத லாகிய பொருளே**
**புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்**
**டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்**
**எழில்நகை கொண்டுநின் திருவடி தொழு கோம்**
**சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்**
**திருப்பெருந் துறை உறை சிவபெருமானே**
**ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்**
**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே.**

திருப்பள்ளி எழுச்சி

போற்றி- இறைவனை புகழ்ந்து வணங்கி உச்சியில் வணங்குவதும் பக்தி உணர்வு அறிவை உள்ளத்தில் நிறைக்க வணங்குவது

இறைவன் நம் உள்ளத்தில் தோன்றாது மறைந்திருத்தலை, தினம்,தினம், திருப்பள்ளி எழுச்சி ஓதி மறைவு நீங்கி வெளிப்பட்டுத் தோன்ற வேண்டிப்பாடுவதாகும். என்வாழ்விற்கு மூல காரணமான எங்கள் குல தெய்வம் எம்பெருமானே வணக்கம் ஈழத்துச் சிதம்பரத்தில் உறைகின்ற சிவபெருமானே, நினது திருமுகத்தில் அருளோடு அழகிய புன்சிரிப்பைக் கண்டு நின் திருவடியைத் தொழுவோம். திருவீதியில் உலகமனைத்திற்கும் உயிர்போன்றவனே, இறைவன் ஆட் கொள்ளும் இடம் சிவபூமியின் திண்ணபுர வீதியில் எழுந்தருளி வந்த, எம்மை நன்னெறியிலும் சைவநெறியிலும் வாழச் செய்து அருள் புரிவாயாக.

1883 ஆம் ஆண்டு அருள்மிகு ஈழத்துச் சிதம்பரம் உலகப் புகழ்பெற்ற, விக்கிரகம் சோழபுரம் குருசாமி ஆசாரியார் திருப்பொழிவுடன் அமைந்த கூத்தப் பெருமான் ஆகும்.

பின்னர் 25 வருடமாக தானிய வாசகத்தில் (நெல்லு) வைத்துப் பாதுகாத்து 23.08.1908 அருள்மிகு கும்பாபிஷேகம் நடைபெற்றதும், நாம் சிதம்பரத்தரிசனம் இங்கு காணவும் ஆர்துரா தரிசனமும் பெற்று மானிடப் பிறவி எடுத்த நாம் இன்புறும் வண்ணம் நம் முன்னோர் அமைத்த ஆலயமாகிய கோயில் அகும்.

இந்த விக்கிரகத்தைத் தரிசித்த இந்தியாவில் இருந்து வந்த கிருபானந்தவாரியார் கி.வா-யெகநாதன், பாஸ்கரன் தொண்டமான் (சிற்ப வல்லுநர்) வைச்சிரவேலு முதலியார், சிங்கார வேலன், குகாமூர்த்தி பேராசிரியர், ஆதினங்கள், இன்னும் பலர் வியப்பால் விழித்து அற்புதமான கூத்தன் அருள்மிகு பேரருள் நிறைந்த பொழிவான அருள் காட்சியை தரிசித்து புகழ்ந்த எம் பெருமான் பரிவார மூர்த்தி சகிதம் ஐந்து தேர்களும் அழகாக அலங்கரிக்கப்பட்டு வீதிவலம் வருவது அளவற்றது. அழுகு நோக்கி அவை வானத்தில் நின்றும் வருவன போலும், திண்ணபுரத்தினை ஆர்ப்பக் களி கூர்ந்திட வலம் வருவார்.

எம்பெருமான் விழாவில் திருவீதி வருவது சாம்பவத் தீட்சை எல்லா உயிர்களும் விரும்பியோ, விரும்பாமலோ, தரிசனம் செய்து கும்பிட்டவர்களுக்கு அருள் கிடைக்கும் மகா உற்சவம் மிக மிக முக்கியமாகும்.

உலகத்தில் இரு ஆலயம் தான் ஐந்து தேர் ஓடும் இந்தியாச் சிதம்பரம், இலங்கை ஈழத்துச் சிதம்பரம் ஆகும்.

இந்தியாவில் சுவாமி வாசஸ்த்தனம் செய்தால் 48 நாட்களில் கும்பாபிஷேகம் செய்து இந்தியா எங்கும் எம்பெருமான் அருள் கிடைக்க தீட்சர்கள் எல்லாரும் ஒற்றுமையாக அமைவாகச் செய்வது போல் நமது ஆலயம், இலங்கை சைவ மக்கள் மற்றும் காரைநகர் மக்கள் நலம் கருதியும் கும்பாபிஷேகம் எல்லோரும் ஏகாந்தமாகவும் ஒற்றுமையாகவும், செயற்பட பிரார்த்திப்போம். திருவாசகம் ஓதுவோம்.

ஐயனாரது திருவுருவத்திலே தில்லை நடராசாப் பெருமானை வழிபட்ட சிவ முருகர் ஞான வடிவினராகிய அந்த அருள் மிகு கூத்தனை திருவிழா மகா உற்சவம் செய்து வழிபடுவோம். மூன்றாம் மாமணி வீதியில் தேர் வடம் பிடித்து இழுத்து வானவர்களும் தரிசித்தும், நாம் தரிசித்தும் நம் ஆணவம் நீங்கி கூத்தப் பிரானது வடிவழகை விழி அமைய ஆர்கண்டு பெருமானது திருவடிகளைத் துதிப்பதற்கு பிரார்த்திப்போம்.

இன்று சிதம்பர சபாநாயகர் வந்தியாகியசெம்மணச் செல்விக்கு கூலியாகிச்சென்று பிட்டுக்குத் தந்திரு முடியில் மண் சுமந்தருளினார். மடாலயத்தில் பிட்டு எம்பெருமானுக்கு அமுதாக படைத்து, அவ்வருள் தரிசிப்போம்.


மார்கழி மாதம் திருவெம்பா ஆரம்ப தினத்திலே முருகேசு அவர்களது 14 ஆவது வயதில் மாசிலாமணி ஐயா- தனது உருத்திராச்ச மாலையை அணிவித்து, ஆசிர்வதித்தும் ஆலயத்தில் திருவெம்பாவை ஓதுவித்தும் 100 ஆவது வருடம் அமைவதும், ஆலயம் வரும் அடியவர்களுக்கு அன்னதானப் பணியையும் ஊர் மக்களுடன் இணைந்து மாணிக்க வாசகர் மடாலயம் அருள் மிகு நாமத்துடன் ஆரம்பித்த 100 ஆவது வருடம் அடையாக்கதவாக மாகேசுவர பூசையும் அமைவதும் நாம் முன்னோர் தொண்டினை வாழ்த்தியும் ஆலயம் சிறப்புறவும் மடாலயம் சிறப்புறவும் அருள்மிகு ஈழத்துச் சிதம்பரம் கூத்தப் பெருமானை திருவாசகம் ஓதிப் பிரார்த்திப்போம்.

சிவ ஆலயத்தையும், மடாலயத்தையும் நம் முன்னோர் காட்டிய வழியில் காரைநகர் மக்கள் வழி வழியாக ஆற்றிவரும் சிவத்தொண்டு அளப்பரியது. நாமும் எங்களது குலதெய்வம் வழிபாடு சிறக்க கும்பாபிஷேகம் செய்து நிறைவுடன் அன்பு நெறி, சிவநெறி, தர்மநெறியில் வாழ்வோம்.

இப் பதிப்பை பிரதி எடுத்து ஏனையவர்களும், சைவர்களும், நம் சந்ததியினரும் வாசித்து ஏதுவாக அமைப்போம்.

(C-4704)

க.கு.க.சிவபாலன்
சிவநெறிப்புரவலர், பாஞ்சசண்யம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைகேள் அரங்கு



## உழவர் திருநாளாம் தைப்பொங்கல் எப்போது?

2026 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழா எம் நாட்டின் பாவனையிலுள்ள இரு பஞ்சாங்கங்களிலும் இருவேறுபட்ட திகதிகளில் தைப்பொங்கல் தினம் போடப்பட்டிருக்கின்றது. திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14.01.2026 (தை 1 ஆம் நாள்) புதன்கிழமையன்று தைப்பொங்கல் என்றும் வாக்கிய பஞ்சாங்கத் தின்படி 15.01.2026 (தை 1 ஆம் நாள்) வியாழக்கிழமை தைப்பொங்கல் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் எது சரி? எது பிழை? எந்த நாளில் தைப்பொங்கல் நிகழ வேண்டும் என்று இருதரப்பாரும் கலந்து ஆலோசித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது அவர்களின் கடமை. ஏற்கனவே உமது சமயத்தை கேலி செய்கின்றார்கள். இதிலே இப்படியும் ஒரு தவறு நிகழுமாயின் இரு பஞ்சாங்கங்களிலுமே நம்பிக்கையற்று விடுவார் கள். இனிமேலாவது இப்படியான பொது வைபவங்களைக் குறிப்பிடும் போது இரு தரப்பாரும் கலந்து ஒரு முடிவோடு தினத்தை வெளியிடுங்கள். ஏனென்றால் தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகள் உலகம் முழுக்க வாழுகின்ற இந்து மதத்தவர்களால் கொண்டாடப்படுகின்ற சமய விழா. இது சாதாரண சதுர்த்தி, கார்த்திகை, அமாவாசை, பௌர்ணமி போன்ற நிகழ்வுகள் இல்லை. அந்தந்தப் பஞ்சாங்கத்தின் பிரகாரம் கொண்டாடுவதற்கு இதற்கொரு தெளிவான பதிலை பத்திரிகை வாயிலாக விளக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

நி.சிவதாண்டவசர்மா, சங்கானை.

**அன்பு வாசகர்களே! உங்கள் பிரதேசங்களில் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகளை குறைகேள் அரங்கிற்கு எழுதுங்கள்.**

ஆசிரியர்,
குறைகேள்அரங்கு,
இல.191, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

# அதிகரிக்கும் 'ஐஸ்' போதைப் பயன்பாடு

## 10 மாதங்கள் 60 ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

**'ஐஸ்' என பொதுவாக அழைக்கப்படும் 'படிக மெத்தம்பேட்டமைன்' என்ற போதைப்பொருளின் பயன்பாடு இலங்கையில் வெகுவாக அதிகரித்து வருவதாகத் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.**

இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மட்டும் 'ஐஸ்' போதைக்கு அடிமையான 60,000இற்கும் மேற்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவி ஆராய்ச்சி பணிப்பாளர் தாமர தர்ஷன குறிப்பிட்டார்.

கடந்த சில ஆண்டுகளாக கைது செய்யப்பட்ட புள்ளி விபரங்கள் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் ஒப்பிடும் போது, ஐஸ் போதைப் பொருளின் பயன்பாடு மிகவும் அதிக மாக உள்ளமையை புள்ளி விபரங்கள் வெளிக்காட்டுகின்றன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் கண்டி மாவட்டங்களில் போதைப் பொருட்பாவனை அதிகமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள் ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார். (நி)

## தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றித ழைப் பெறுவதற்கான பயற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்களுக்கான கல்வித் தகைமையாக க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏதேனும் மூன்று பாடங்களில் திறமை சித்தி யுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக ஆறு பாடங் களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியும் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணபதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

இக்கற்கைநெறிக்கு விண்ணபிக்கும் விண்ணபதாரிகள் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர் வரும் 2026. 01.15இற்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும்.

அத்துடன் மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென வும் அறிவித்துள்ளனர். (3)

# இராசிபலன்

31.12.2025
மார்கழி 16 , புதன்கிழமை
துவாதசி முன்னிரவு 11.27 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 11.34


சுபநேரம் - 4.59-6.29 மணிவரை
இராகுகாலம் - 12.29-1.59மணிவரை
கார்த்திகை விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்-
சித்திரை, சுவாதி


வளவன்


மேஷம்

காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


ரிஷபம்


வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.


மிதுனம்


அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.


கடகம்

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.


சிம்மம்


குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, செய் தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

எதிர்பாபாக இருந்தவர்கள் மனம்மாறுவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, அதிகம் செலவாகுமென நினைத்த காரியம் குறைந்த செலவில் முடியலாம்.


துலாம்


சில பிரச்சினைகளைக் கண்டும் காணமலும் இருப்பது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.


விருச்சிகம்


வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கைக் கூடும், திடீர் பயணங்கள் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு.


தனுசு


இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


மகரம்

பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரலாம், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம்மாறுவர்.


கும்பம்

நண்பர்களின் தொடர்புகள் நன்மை தரும், தாய்வழி உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும்.


மீனம்

தொழிலில் முன்னேற்றமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், பகை விலகி பாசம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**நன்றி செலுத்த வேண்டியது நமது கடமைகளில் ஒன்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் 2025 மறக்க முடியாத நினைவுகள்

**ஜுலை- 01**

செம்மணி மனிதப் புதைகுழியில் சிறுவர்கள் விளையாடும் பொம்மை மீட்கப்பட்டது.

**ஜுலை- 02**

எலான் மஸ்கின் "ஸ்டார்லிங்க்" இணைய சேவை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**ஜுலை- 10**

இலங்கைப் பொருட்களுக்கு அமெரிக்க ஜனாதிபதியால் 30 வீதம் தீர்வை வரி விதிப்பு.

**ஜுலை- 14**

வடமத்திய மாகாண சபைக்கு முதன் முறையாகத் தமிழ்ப் பெண் சுபாஜினி மதியழகன் செயலாளராக நியமனம்.

**ஜுலை- 21**

பாடசாலை நேரம் 30 நிமிடங்களால் அதிகரிக்கப்படுவதாக பிரதமர் ஹரிணி அறிவித்தார்.

**ஜுலை- 24**

அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு நல்லூரில் ஆர்ப்பாட்டம்.

**ஜுலை- 27**

புதிய பிரதம நீதி அரசராக ப்ரீத்தி பத்மன் சூரசேன கொழும்பில் பதவியேற்பு.

**ஜுலை- 29**

செம்மணி மனிதப்புதைகுழியை சுவிஸ் தூதுவர் பார்வையிட்டார்.

**ஆகஸ்ட் -06**

யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் உயிரியல் ஆசான் குணசீலனுக்கு "யாழ் விருது" வழங்கப்பட்டது.

**ஆகஸ்ட் -11**

காற்றாலைக்கு எதிராக மன்னாரில் போராட்டம் முன்னெடுப்பு.

**ஆகஸ்ட் -15**

யாழ்.போதனா வைத்தியசாலையின் பொதுச்சத்திர சிகிச்சை நிபுணர் சுதர்சன் காலமானார்.

**ஆகஸ்ட் -22**

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.**



**ஆகஸ்ட் -28**

6 பாதாள உலகக் குழுவினர் இந்தோனேசியாவில் கைது.

**ஆகஸ்ட் -30**

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதிகோரி யாழில் போராட்டம் முன்னெடுப்பு.

**செப்ரெம்பர் - 01**

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு ஜனாதிபதி அநுரவால் அடிக்கல் நாட்டி வைப்பு.

**செப்ரெம்பர் - 01**

ஜனாதிபதி அநுரவால் கடவுச்சீட்டு அலுவலகம் யாழில் திறந்து வைப்பு.

**செப்ரெம்பர் - 01**

மயிலிட்டி மீன்பிடித்துறைமுக அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைப்பு.

**செப்ரெம்பர் - 03**

புதிய 18 மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஜனாதிபதியால் நியமனம்.

**செப்ரெம்பர் - 03**

நாவற்குழியில் நவீன கடல் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை திறந்து வைப்பு.

**செப்ரெம்பர் - 11**

விஜேராம இல்லத்தில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியேறினார்.

**செப்ரெம்பர் - 24**

கிளி. மாவட்ட பொது வைத்தியசாலையில் பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு ஆரம்பித்து வைப்பு.

**ஒக்டோபர் -04**

நெடுந்தீவில் முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நி[illegible]

**ஒக்டோபர் -10**

வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களுக்கு திருகோணமலையில் கிழக்கு மாகாண ஆளுநரால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

**ஒக்டோபர் -14**

பாதாள உலகக் குழு தலைவர் கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான செவ்வந்தி உட்பட ஐவர் நேபாளத்தில் கைது செய்யப்பட்டனர்.

**ஒக்டோபர் -17**

தொல்பொருள் இடங்களை ஆராய புத்தசாசன அமைச்சர் யாழுக்கு விஜயம் மேற்கொண்டார்.

**ஒக்டோபர் -20**

சொத்துக்கள் ஈட்டப்படுதல் தொடர்பான விசாரணைப்பிரிவு யாழில் திறந்து வைப்பு.

**ஒக்டோபர் -26**

யாழில் தமிழ் இளைஞர்களின் மில்லர் (போராட்டம்) திரைப்படத்தில் பங்கேற்பதற்காக கவிஞர் வைரமுத்து யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

**நவம்பர்- 13**

இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி.

**நவம்பர்- 16**

திருகோணமலையில் பிரட்ரிக்கோட்டைப் பகுதியில் இரவோடு இரவாக புத்தர்சிலை பிரதிஷ்டை - பொது மக்கள் எதிர்ப்பு.

**நவம்பர்- 19**

இலங்கை தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினர்.

**நவம்பர்- 21**

அநுர அரசுக்கு எதிராக ஐ.தே.க தலைமையிலான எதிர்ப்புப் பேரணி-நுகேகொடவில் நடைபெற்றது.

**நவம்பர்- 28**

**இலங்கையைப் புரட்டிப்போட்ட டித்வா சூறாவளி, வெள்ளப் பேரனர்த்தத்தில் சிக்கி 600 இற்கு மேற்பட்டோர் உயிரிழப்பு பலர் மாயம்.**

**நவம்பர்- 30**

திருநெல்வேலியில் பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை.

**டிசம்பர்- 07**

செம்மணியில் அணையாவிளக்கு நினைவுத் தூபி இனந்தெரியாதோரால் இடித்தழிப்பு.

**டிசம்பர்- 12**

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் மாபெரும் கண்டனப் பேரணி.

**டிசம்பர்- 15**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் முனைய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது.

**டிசம்பர்- 17**

ஜனாதிபதி அநுர - சீனப் பிரதிநிதி கொழும்பில் சந்திப்பு.

**டிசம்பர்- 18**

ஈழத் தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கோரி தமிழ் நாட்டு முதலமைச்சரைச் சந்தித்த தமிழ்த் தேசியப் பேரவை.

**டிசம்பர்- 20**

வலம்புரிப் பத்திரிகையின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழா.

**டிசம்பர்- 21**

பிரதமர் ஹரிணி அமரசூரிய கிளிநொச்சிக்கு விஜயம்.

**டிசம்பர்- 21**

தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம். தவத்திருவேலன் சுவாமிகள் உட்பட ஐவர் கைது.

**டிசம்பர்- 25**

யாழ்.கோட்டை முனியப்பர் ஆலய முகப்பு வாயிலைத் தடுத்து தொல்லியல் திணைக்களத்தால் எல்லைக் கற்கள் இடப்பட்டன.

**டிசம்பர்- 27**

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டார்.



இலங்கையைப் புரட்டிப்போட்ட டித்வா சூறாவளி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பங்களாதேஷின் முதல் பெண் பிரதமர் கலீதா ஜியா காலமானார்



(டாக்கா)

வயது மூப்பினால் நீண்டகாலம் உடல் நலக் குறைவால் பாதிக்கப் பட்டிருந்த பங்களாதேஷின் முதல் பெண் பிரதமர் கலீதா ஜியா தனது 80 ஆவது வயதில் காலமானார்.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் நாட்டின் முதல் ஜனநாயகத் தேர்தலில் தனது கட்சியை வெற்றிக்கு அழைத்துச் சென்ற பிறகு, 1991ஆம் ஆண்டு கலீதா ஜியா பங்களாதேஷின் முதல் பெண் அரசாங்கத் தலைவராக ஆனார்.

நேற்று முன்தினம் திங்களன்று அவரது உடல் நிலை "மிகவும் மோசமாக" இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர். அவருக்கு உயிர்காக்கும் கருவிகள் பொருத்தப் பட்டிருந்தன.

எனினும், அவரது வயது மற்றும் ஒட்டுமொத்த உடல்நலக் குறைவு காரணமாக ஒரே நேரத்தில் பல சிகிச்சைகளை வழங்குவது சாத்தியமில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

கலீதா ஜியாவின் உடல் நிலை மோசமாக இருந்தபோதிலும், பெப்ரவரியில் எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்று அவரது கட்சி முன்னதாகவே கூறியிருந்தது.

பங்ளோதேஷ் முன்னாள் ஜனாதிபதி ஜியாவுர் ரஹ்மானின் மனைவியாக ஜியா முதன்முதலில் பொது மக்களின் கவனத்திற்கு வந்தார்.

1981 ஆம் ஆண்டு இராணுவ சதியில் ஜியாவுர் ரஹ்மான் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஜியா அரசியலில் நுழைந்து பின்னர் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியை வழிநடத்தும் பொறுப்பினை ஏற்றார்.

1996ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக பிரதமராக ஒரு சில வாரங்கள் மட்டுமே நீடித்த பின்னர் ஜியா, 2001ஆம் ஆண்டு மீண்டும் பிரதமர் பதவிக்கு வந்தார்.

2006 ஒக்டோபரில் பொதுத் தேர்தலுக்கு முன்னதாக பதவி விலகினார்.

ஊழல் குற்றச்சாட்டுகளாலும், கடந்த ஆண்டு பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட அவாமி லீக் தலைவர் ஷேக் ஹசீனாவுடனான நீண்டகால அரசியல் போட்டியாலும் அவரது அரசியல் வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

குறிப்பாக 2018ஆம் ஆண்டு ஹசீனாவின் நிர்வாகத்தின் கீழ் ஜியா ஊழல் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டார்.

தான் செய்த குற்றத்தை ஜியா மறுத்து, குற்றச்சாட்டுகள் அரசியல் ரீதியாக உள்நோக்கம் கொண்டவை என்றும் கூறினார்.

பங்களாதேஷில் நடந்த அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் ஹசீனாவை பதவி கவிழ்த்து, நாடுகடத்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளான சிறிது நேரத்திலேயே, கடந்த ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## ஹமாஸ் அமைப்புக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்த ட்ரம்ப்

(வோஷிங்டன்)

காசா பகுதியில் அமைதி திரும்ப வேண்டுமானால் ஹமாஸ் அமைப்பு உடனடியாக ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்க்கும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும் இடையிலான சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் "அவர்களுக்கு ஆயுதங்களை கைவிட மிகக் குறுகிய கால அவகாசம் மட்டுமே வழங்கப் படுகிறது.

அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், அது அவர்களுக்கு மிகவும் ஆபத்தானது" என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)



## அணுசக்தி திட் ஈரானை சின்ன ட்ரம்ப் ஆவே

(வோஷிங்டன்)

"ஈரான் தனது அணுசக்
மீண்டும் தொடங்கினால் அழி
அவர்களை சின்னாபின்ன
என அமெரிக்க ஜனா
எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள தனது இல்லத்தில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஈரானுக்கு எதிராக புதிய இராணுவ நடவடிக்கை களை எடுப்பதன் அவசியம் குறித்து ட்ரம்ப் உடன் நெதன்யாகு ஆலோசனை நடத்தியதாக தெரிகிறது.

அதன்பின், ஊடகவியலாளர்களிடம் ஜனாதிபதி ட்ரம்ப்

## வடதுருவ ஒளி எனும் இயற்கை ரசிக்கும் வகையில் நோர்வே



(நோர்வே)

இயற்கையின் அதிசயமான "வடதுருவ ஒளி" களை காணபதற்காக, நோர்வே நாடு உலகின் முதல் இரவுநேர முழுக் காட்சி ரயிலை அறிமுகப் படுத்தியுள்ளது.

சூரியனில் இருந்து வெளிவரும் மின்னூட்டம் பெற்ற துகள்கள், பூமியின் வளிமண்டலத்தில் உள்ள வாயுக்களுடன் மோதும் போது வானில் உருவாகும் வண்ண மயமான ஒளி ஜாலமே வடதுருவ ஒளிகள் ஆகும். இவை பெரும்பாலும் துருவப் பகுதிகளில் பச்சை, ஊதா மற்றும் சிவப்பு நிறங்களில அலை அலையாகத் தோன்றி வியக்கத்தக்க இயற்கை அதிசயத்தை உருவாக்குகின்றன.

வடதுருவ ஒளிகள் நோர்வே, ஸ்வீடன், ஃபின்லாந்து, ரஷ்யா போன்ற வட திசை நாடுகளில் தோன்றும். இந்த வட துருவ ஒளிகளைக் காண்பதற்காக நோர்வே அரசு இரவுநேர முழுக்காட்சி ரயிலை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த ரயிலின் கூரை மற்றும் பக்கவாட்டுப் பகுதிகள் முழுவதும் கண்ணாடியால் ஆனவை. இதனால் பயணிகள் பனி படர்ந்த மலைகளையும், வானில் தோன்றும் வட துருவ ஒளிகளையும் எவ்விதத் தடையுமின்றி ரசிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டத்தை ஆரம்பித்தால் ...ாபின்னமாக்குவோம்!

## ...வஷம்

"...கதித் திட்டத்தை ...ழித்துவிடுவோம். ...னமாக்குவோம்" ...திபதி ட்ரம்ப் ...ர்.



கூறியதாவது: ஜூன் மாதம் முக்கிய அணுசக்தி செறிவூட்டல் தளங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களால் ஈரானின் அணு சக்தித் திறன்கள் முற்றிலும் முழுமையாக அழிக்கப்பட்டு விட்டன.


இப்போது ஈரான் மீண்டும் கட்டமைக்க முயற்சிக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அவர்கள் அப்படிச் செய்தால், நாம் அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கும்.

நாம் அவர்களைத் தடுத்து நிறுத்துவோம். அவர்களைச் சின்னாபின்னமாக்குவோம்.

அந்த திட்டத்தை முற்றிலுமாக அழித்துவிடுவோம்.

ஆனால், அப்படி அவர்கள் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறேன்" என அவர் தெரிவித்தார். (நி)

## 2026ஆம் ஆண்டிற்கான 'பிரிக்ஸ்' தலைமை பொறுப்பை ஏற்கும் இந்தியா



(டில்லி)

2026ஆம் ஆண்டுக்கான பிரிக்ஸ் அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கவுள்ளது.

உலகளாவிய ரீதியாக முக்கியமான புவிசார் அரசியல் சூழ்நிலையில் விரிவாக்கப்பட்ட ஒரு கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பு இதுவாகும்.

இந்த நிலையில், தேசிய நலன்கள் வேறுபட்டாலும், பொதுவான சவால்களை எதிர்கொள்ளும் உறுப்பு நாடுகளை பிரிக்ஸ் ஒன்றிணைக்க முடியும் என்பதில் இந்தியா கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிக்ஸ் அமைப்பு, பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனாவால் உருவாக்கப்பட்டதுடன், பின்னர் தென்னாபிரிக்காவும், அதில் இணைந்தது.

நீண்டகாலமாக பாரம்பரிய மேற்கத்திய சக்தியாக செயற்பட்டு வந்த பிரிக்ஸ், தற்போது வளர்ந்து வரும் இராஜதந்திர எதிர் சக்தியாக உருவாகி வருகின்றது.

அண்மைய ஆண்டுகளில் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளை உள்ளடக்கியதாக இந்த அமைப்பு விரிவடைந்துள்ளது.

பிரிக்ஸ் கூட்டமைப்பு உலக மக்கள் தொகையில் அரை வாசியையும் உலகளாவிய பொருளாதார உற்பத்தியில் சுமார் 40 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. (நி)

## ...கையின் அதிசயம் ...வ புதிய முயற்சி

முடியும்.

இந்த ரயில் நோர்வேயின் ட்ரொம்சோ மற்றும் நார்விக் ஆகிய பகுதிகளுக்கு இடையே பயணிக்கிறது.

ஆர்க்டிக் வட்டத்துக்குள் செல்லும் இந்தப் பயணம் பயணிகளுக்கு ஒரு மறக்க முடியாத அனுபவத்தைத் தருகிறது.

குளிர் காலத்திலும் பயணிகள் இதமான வெப்பத்தில் அமர்ந்து இயற்கையை ரசிக்க இந்த ரயிலில் நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இரவு நேரத்தில் பயணிக்கும் போது வானில் மின்னும் நட்சத்திரங்களையும், நிலவொளியில் ஜொலிக்கும் பனிப்பாறைகளையும் பார்க்க இது சிறந்த வழியாகும்.

முன்பு வடதுருவ ஒளிகளைப் பார்க்க கடும் குளிரில், திறந்த வெளியில் காத்திருக்க வேண்டியிருந்தது.

ஆனால், இப்போது இந்த சொகுசு ரயிலில் அமர்ந்துகொண்டே அந்த அற்புதக் காட்சியைப் பார்க்கலாம் என்பதால், உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளிடையே இந்த ரயிலுக்குப் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. (நி)

## பட்டாசு விற்பனைக்கு ஜேர்மனியில் கடும் எதிர்ப்பு



(பேர்லின்)

ஜேர்மனியில் புத்தாண்டு கொண்டாட்டங்களை முன்னிட்டு பட்டாசு விற்பனை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது.

எனினும், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் காரணங்களை முன்வைத்து இதற்குப் பல்வேறு தரப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ஜேர்மனிய சட்டப்படி, ஆண்டுதோறும் டிசம்பர் 29 முதல் டிசம்பர் 31 வரையிலான கடைசி மூன்று வேலை நாட்களில் மட்டுமே பொது மக்களுக்கு பட்டாசுகள் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

இணையவழியில் முன்பதிவு செய்த வாடிக்கையாளர்களுக்கும் இந்த மூன்று நாட்களில் மட்டுமே பொருட்களை விநியோகம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனைக்கு எதிராக ஜேர்மன் மருத்துவ சங்கம், காவல்துறை, சுற்றுச்சூழல் மற்றும் விலங்கு பாதுகாப்பு அமைப்புகள் ஒன்றிணைந்து குரல் கொடுத்துள்ளன.

தனிநபர் பட்டாசு வெடிப்பதை நாடு முழுவதும் முழுமையாகத் தடை செய்ய வேண்டும் என்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

பட்டாசு வெடிப்பதன் மூலம் ஆண்டுதோறும் ஏராளமானோர் படுகாயமடைந்து அவசர சிகிச்சை பிரிவுகளில் அனுமதிக்கப்படுவதாகவும், இது மருத்துவக் கட்டமைப்பிற்குப் பெரும் சுமையை ஏற்படுத்துவதாகவும் மருத்துவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தில் 5 பேர் உயிரிழந்ததை சுட்டிக் காட்டியுள்ள பொலிஸ்துறை, பணியில் இருக்கும் அதிகாரிகள் மீது பட்டாசுகளை எறிந்து தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் மீண்டும் அரங்கேறலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

பட்டாசுகளால் ஏற்படும் அதிகப்படியான சத்தம் செல்லப்பிராணிகள் மற்றும் காட்டு விலங்குகளுக்குக் கடுமையான மன அழுத்தத்தை உண்டாக்குவதாகவும், இதனால் வெளியேறும் புகை மற்றும் குப்பைகள் சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதாகவும் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனினும் இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், பட்டாசு விற்பனை இந்த ஆண்டு புதிய உச்சத்தைத் தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு 197 மில்லியன் யூரோ மதிப்பிலான பட்டாசுகள் விற்பனையாகின எனவும், இந்த ஆண்டு விற்பனை 10% முதல் 15% வரை அதிகரிக்கக் கூடும் என் பட்டாசு தொழில் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

குறுகிய கால விற்பனை அனுமதி மற்றும் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், ஜேர்மனிய மக்கள் புத்தாண்டை வரவேற்க உற்சாகத்துடன் தயாராகி வருகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EPF நிறுவன செயற்பாடு ‘டிஜிற்றல்’ மயமானது


(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தின் செயற்பாடுகள் மற்றும் சேவைகளை டிஜிற்றல் மயமாக்கும் திட்டமானது கொழும்பு, நாரஹேன்பிட்டியிலுள்ள தொழில் அமைச்சு வளாகத்தில் நேற்று முன்தினம் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அந்தவகையில் ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் மற்றும் உறுப்பினர்களை இணைய வழியில் பதிவு செய்யும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொழில் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.பியதிஸ்ஸ உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர். (நி)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1936.01.08 மறைவு 28.12.2025

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஒய்வுநிலை அதிபரும், அறம் நம்பிக்கை நிதியத்தின் முன்னாள் தலைவரும்

அமரர். அப்பாத்துரை பஞ்சலிங்கம்

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1869)

பிரிவுத் துயருடன் - அறம் நம்பிக்கை நிதியம் நிர்வாகத்தினர், கிளிநொச்சி.



## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**78/56, மூளாய் வீதி, 2ஆம் ஒழுங்கை, வட்டாரம் 10**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10, மூளாய் வீதி, 2ஆம் ஒழுங்கையிலுள்ள இல 78/56 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **குட்டியன் சின்னராசாவும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4515/19.03.2003ஆம் இலக்க உறுதியால் இராசையா கண்ணலிங்கம் ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**வைரவன் பரமேஸ்வரனும் பெண் சிவகலாவும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11127/02.12.2010ஆம் இலக்க.உறுதியால் குறித்த **குட்டியன் சின்னராசாவும் பெண் சற்குணதேவியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர் : **"கொட்டிசிட்டி"**
இறை : **மூளாய்**
விஸ்தீரணம் : நில.பர.இலா 2 1/4
எல்லைகள்: **கிழக்கு** - தன்னிலத்து ஒழுங்கை, **வடக்கு** - சின்னத்துரை பெண் சின்னம்மாவின் ஆதனம், **மேற்கு** - கதிரவேலு செல்லத்துரையின் உரிமைக் காரருக்கும் பெண் பூபாலதேவிக்குமுரிய ஆதனம், **தெற்கு** - கதிரவேலு செல்வரத்தினம் பெண் பூபாலதேவியின் ஆதனம்

குறித்த **வைரவன் பரமேஸ்வரனும் பெண் சிவகலாவும்** ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **வைரவன் பரமேஸ்வரனும் பெண் சிவகலாவும்** ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(6420)




# எனது 35 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே... சோழியபுரம் பத்ம வெளியீடு

**மக்கள் துயர் போக்கும் புத்தாண்டே வருக! வருக!! வருகவே!!!**

2025ஆம் வருடம் கடந்து செல்லும்போது இயற்கையின் சீற்றத்தால் வெள்ளக்காட்டையும் டித்வா புயலையும் கண்டோம். மரண ஓலங்களையும் கண்டோம். மக்கள் புதையுண்டதையும் கண்டோம். நிர்க்கதியானோம். இயற்கையின் தண்டனைக்கும் ஆளாகினோம். இயற்கையை யாராவது கட்டுப்படுத்த முடியுமா? இதற்கு யார்தான் என்ன செய்வது இறுதியில் சுழிபுரம் - பறாளையில் பள்ளிகொண்டுள்ள சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகரே எம்மை இவ்வளவுடன் காப்பாற்றி விட்டார் என்று ஆறுதல் அடைவோமாக!

**“ஆறுமனமே ஆறு இந்த ஈசுர விநாயகன் கட்டளை ஆறு”**

**இனிப்பிறக்கும் புதிய வருடம் "நாளை நமதே இந்த நாடும் நமதே" எனக் கூறிக் கொண்டு வருவதைப் பார்த்தாயா**
**தோழா! பார்த்தாயா? தோழா! தோழா!! மக்கள் தோழா!!!**
**நடந்ததை எண்ணிக் கவலைப் பட்டவன் அவன் மடையன்!**
**தோழா! தோழா!! நாட்டுத் தோழா!!!**
**நடப்பதை எண்ணி நினைப்பவனே நம் அநுரத் தலைவன்!**
**தோழா! தோழா!! நாட்டுத் தோழா!!!**
**எதுவரினும் வரட்டும் தோழா!!**
**இறைவன் ஒருவன் இருக்கின்றான் தோழா!! நாட்டுத் தோழா!!!**
**இலட்சியத்தைக் கைவிடாத எங்கள் அநுரத் தலைவா!**
**தோழா! தோழா!! நாட்டுத் தோழா!!!**
**நாட்டைக் கட்டி எழுப்பும் எங்கள் தோழா!**
**தோழா! தோழா!! அநுரத் தோழா!!**

இப்புதிய வருடம் மக்களின் இயல்பு வாழ்க்கை மீட்சிபெற, பழையன நீங்கிட, புதியன மலர்ந்திட, புதுமைகள் பூத்திட, நாடு வளம்பெற, மக்கள் நலம்பெற, இறையருள் வேண்டி சர்வவல்லமை பொருந்திய சுழிபுரம் பறாளையில் பள்ளிகொண்டு அருளாட்சி புரியும் ஈசுர விநாயகரின் திருப்பாதங்களை வணங்கி இப் புத்தாண்டை வருக வருக என வரவேற்று வாழ்த்துகின்றேன்.

**ஈசுர விநாயகரின் மகிமை என் அன்பு உள்ளங்களே!**

கடந்த 23 வருடங்களுக்கு முன்னர் யுத்த காலத்தில் எமது சமாதான அரணிலே தென்னிலங்கையிலே இருந்து வருகை தந்த சர்வமத குருமார் சமாதான விளக்கை ஏற்றி வைத்தனர். அதன் பின்னரே நாட்டில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியது.

அப்பிக்குமார் குழுவில் முக்கியமானவர் [illegible] சோமானந்த தேரர் கடந்த மாதம் தேரர் அவர்கள் எமது தேவஸ்தானத்திற்கு வருகை தந்து சமாதான அரணைப் பார்வையிட்டு ஈசுர விநாயகரையும் தரிசனம் செய்து என்னுடன் கலந்துரையாடினார்.

புத்தபெருமானின் போதனைகளை பௌத்த, சிங்கள மக்களுக்கு வழங்குவதில் (பண) பேர் போனவர் தலைசிறந்தவர். அப்போது ஈசுர விநாயகரின் மகிமையை அடியேன் அவரிடம் பின்வருமாறு கூறினேன்.

ஒருமுறை புத்தபெருமான் இவ்வுலகிலே உள்ள பொருள் இல்லாத பொருள் பற்றி ஆராய்ந்ததற்காக மனித உலகத்திலிருந்து (மனுஷ லோக்கய இந்தலா) தெய்வ உலகத்திற்கு (தெவிலோகவட்ட) சென்று அங்கே தெய்வ சபையில் (தெவிசபாவே) ஈஸ்வர புத்திரருடன் கலந்துரையாடிவிட்டு (சாக்காச்சா கறலா) திரும்பவும் மனித உலகத்திற்கு வந்ததாக புத்தபெருமானின் போதனையில் கூறப்படுகின்றது. அப்படியானால் ஈஸ்வர புத்திரர் என்பது யார்?

(1) கணபதி (கணதேவி) ஞானக் கடவுள்

(2) முருகப்பெருமான் (கதறகமதேவி) யுத்தக் கடவுள்.

யுத்தக் கடவுளாகிய முருகப்பெருமானிடம் புத்தபெருமான் சம்பாஷனை செய்யமாட்டார். ஞானக் கடவுளாகிய விநாயகரிடமே சம்பாஷணை செய்துள்ளார்.

எனவே, புத்த தர்மத்திலே (பண) கூறப்படுகின்ற (தெவிபுத்திறயெக்) ஈஸ்வர விநாயகரே என்பது நிரூபணமாகின்றது என்று கூறி சுவாமிகள் வதுன்ஷ தேரரே அடியேனின் கருத்தை ஏற்றுக்கொள்ளுகின்றீர்களா? என்று சோமானந்த தேரரிடம் கேட்டேன்.

சாமியின் கருத்தை ஏற்றுக் கொள்கின்றேன் என விடை பகிர்ந்தார். மீண்டும் ஈசுர விநாயகரின் அருளாசி வேண்டும். எனவே ஒரு தேங்காய் எனது தலையைக் சுற்றி நேர்த்தி பண்ணி தாருங்கள் சிதறு தேங்காய் அடிப்பதற்கு என்று கேட்டார்.

அவ்வாறே தலையைச் சுற்றி தேங்காயை சிதறு தேங்காயாக அடிக்கும்படி கூறினேன்.

எம்பெருமானின் வீதியை சுற்றி வந்து தேங்காயை சிதறடித்து ஈசுர விநாயகரை வணங்கி நேர்த்தியை முடித்துக் கொண்டார்.

புத்த பெருமான் ஒரு தத்துவஞானி. ஒரு மத போதகர் மனிதகுலம் அறியாமையை அகற்றி நன்நெறி வாழ வழிகாட்டிய மகா புருஷன் அவர் கடவுள் அல்ல பௌத்த சிங்கள மக்களுக்கும் சைவ சமய கடவுளே தான் கடவுள் என்பதை அறிந்து கொள்வோமாக!

**சோழியூரான் பிறைசூடிக்குரு (ஆன்மீக வாதியும் சந்ததிப் பூசகரும், பரம்பரை பரிபாலகரும்)**

(6431)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதிய வருடம் புதுமைகளை முன்னிறுத்தி முயற்சிகளுக்கு மெருகூட்டட்டும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே**

2025 புதிய வருடத்திற்கு வழிவிட்டு கடந்து செல்கின்றது. கடந்து செல்வது போல தோற்றினாலும் பல அழிவுகளுக்கு முகங்கொடுத்து உறவுகள் பலரை தேடியலைய வைத்திருக்கின்றது. வரவேற்பதிலிருந்த மகிழ்ச்சி கொஞ்சங்கொஞ்சம் மாற்றமடைந்து இறுதியில் துன்பியல் காலமாக கடந்து போயிருக்கின்றது. உறவுகளை இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றார்கள்.

சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களின் தாக்கம் ஆபத்தான நிலைக்கு செல்கின்றபோது இவ்வாறான நிலைமை உருவாகின்றது. இவ்வாறான சூழ்நிலைகளுக்கு நாம் எம்மை தயாரான நிலையில் வைக்கவில்லை என்பதனை கவனிக்கவேண்டும்.

வடமாகாண அபிவிருத்தி தனியொருவரின் கைகளிலோ அல்லது திணைக்களத்திடமோ தங்கியில்லை. அனைத்து மக்களும் ஒன்றிணைந்தாலே இது சாத்தியமாகும். வாழ்வாதாரத்தை ஏங்கி தமது வாழ்வு சிறக்காதா என அனுதினமும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் மக்களின் நலன்கள் முதலில் கவனிக்கப்பட வேண்டும்.

எமது பிரதேசத்து வளங்களை முழுமையாக இனங்கண்டு அவற்றை இளையசமூகத்தவர்களும் குடும்ப உறுப்பினர்களை இழந்துள்ளவர்களையும் இன்னும் வாழ்க்கையை தவறான வழிகளில் சென்று பலவிதங்களில் தொலைத்தவர்களும் இச் சமூகத்தில் வாழ வழிசெய்திடல் அவசியமாகும்.

கௌரவ வடமாகாண ஆளுநர் அவர்களின் வெளிப்படுத்தலில் 2026 இனை வடமாகாண அபிவிருத்திக்கான ஆண்டாக கொண்டிருப்பதனை அறியமுடிந்தது. வடமாகாணத்தின் அந்நிய செலாவாணி ஏறக்குறைய 4 சதவீதத்தில் முட்டிமோதிக் கொண்டிருக்கின்றது.

இது ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவானதாகும். இந்த அடைவினை நாம் மேலுயர்த்துவதற்கான வாய்ப்பினை எதிர்நோக்கியிருக்கின்றோம். கிராமங்களை தொழில்நுட்ப கிராமங்களாக மாற்றியமைக்க வேண்டும் இதனை பல வருடங்களாக பேச்சிலேயே வைத்திருக்கின்றோம். அதனை ஆக்கபூர்வமான வினைத்திறனான மக்களின் பங்களிப்புடன் செயற்படுத்த வேண்டும். எமக்கிருக்கின்ற மனிதவளத்தை தொழில் நுட்ப வாய்ப்புக்களை உள்வாங்கி அதில் சிறந்த அடைவைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். எமது பிரதேசத்து உற்பத்திப் பொருள் உலக சந்தையில் வலம் வரவும் எம்மவர் அடையாளம் உற்பத்திப் பொருட்களில் மேலோங்கியிருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். புலம்பெயர்ந்த உறவுகளின் பங்களிப்பு ஆக்கபூர்வமான போக்கில் தொழிற்றுறை விருத்தியில் முதலீடு செய்யப்பட்டால் எம்மவர்க்கான வேலைவாய்ப்பும் குடும்ப தனிமனித வருமானமும் அதிகரிக்கும்.

நாட்டின் பொருளாதாரச் சுமை வரவர அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில் பணவீக்கம் நாம் எதிர்பாராதளவில் கூடிக்குறைந்து கொண்டிருக்கும். இந்த நிலையில் இயற்கை சீற்றத்தினால் மக்கள் மீண்டும் மீண்டும் அவதிப்படும் நிலைக்குள் வந்து சேர்ந்துவிட்டால் நாம் எதிர்பார்க்கின்ற உயர்வை எட்ட முடியாது. உலகநாடுகளிலிருந்து பெற்ற கடனை திட்டமிட்டு மீள செலுத்த முடியாது போய்விடும். எமது பொருளாதார சுமை இனி வரும் சந்ததிக்குள் திணிக்கப்படாதவாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். புதிய எதிர்பார்ப்புக்களும் போக்குகளும் தொழில் நுட்ப வருகைகளை சரிசமமாக உள்வாங்கும் தன்மை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



சுற்றுலாத்துறைக்கான அபிவிருத்தியை வேகமாக முடுக்கிவிடலாம். இதன் மூலம் இத்துறைக்கான வழங்கல் சேவைகளுக்காக அனைத்து துறை சார் பெருமக்களின் உதவியை பெற்றிடலாம். பாரம்பரிய மருத்துவம் சித்த மருத்துவம் என்பனவற்றுக்கு அவசியம் முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். எமது பாரம்பரியத்தின் வரலாற்றை வெளிப்படுத்தும் சிறந்த தொழிற்றுறைகளை மேலும் விருத்தி செய்யவும் உள்ளூர் மருந்துகளின் தரத்தை நிர்ணயம் செய்யும் கட்டமைப்பும் உருவாக்கப்படல் வேண்டும். எமது கலை,கலாசார விழுமியங்களை மேம்படுத்தும் செயற்பாடுகளை எமது குரலை உயர்த்திச் சொல்லும் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். பெண்களுக்கான சமத்துவம் சரிநிகர் சமமான தொழில்விருத்தித் திறனை அவர்களுக்கு போதித்து அவற்றுக்கான மென்திறன்களை விருத்தி செய்தல் வேண்டும். பெண்தலைமைத்துவ குடும்பங்களுக்கான சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவர்களின் மனைப்பொருளாதாரம் மேன்மைபெற வழிவகைகள் செய்தல் வேண்டும்.

விவசாய அபிவிருத்தியில் காலநிலையைத் துல்லியமாக கணிக்கும் கட்டமைப்பு வானிலை ஆய்வு மையங்களுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் ஏனைய திணைக்களங்களும் இணைக்கப்பட்டு காலத்துக்குக் காலம் செய்திகள் தகவல்கள் விவசாயப் பெருமக்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு மென்செயலிகள் மூலம் வழங்கப்பட வேண்டும். எமது பயிர்ச்செய்கையின் வடிவத்தில் காலநிலைக்கேற்ற மாற்றங்களை பரிந்துரைப்பதோடு அதற்கான வல்லுநர் குழாமின் வழிநடத்தல்களை பெற்றிட வாய்ப்பளிக்க வேண்டும்.

கால்நடை அபிவிருத்தி மற்றும் மீன்பிடி அபிவிருத்திக்கு திட்டமிடப்பட்ட கொள்கைப்பிரகாரம் அவற்றை மேம்படுத்தும் வழிமுறைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படல் வேண்டும். எமக்கு தேவையான ஊட்டச்சத்தை எமது உற்பத்தியில் பெறும் வழிவகைகள் திட்டங்களாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதில் தெரிவிக்கப்பட்ட தற்போதும் ஒவ்வொரு திணைக்களத்திலும் நிறுவனங்களிலும் நடைமுடையில் இருக்கும். அவற்றை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய வழிவகைகள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி சமூகத்தின் பங்களிப்பு முழுமையாக பெறப்படல் வேண்டும். எமது புலமையாளர்களின் ஆய்வுகள், கருத்தரங்குகள்,களநிலைமைகளை அறியும் அறிக்கைகள் என்பனவற்றை பிராந்திய அபிவி ருத்தி நோக்கி திருப்பிவிடுதல் அவசியமாகின்றது.

எதிர்வரும் மூன்று வருடங்களை இதற்காக எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக எமது மக்களின் வேலைவாய்ப்பிற்காக எமது மக்களின் நல்வாழ்வுக்காக நாம் ஏன் செலவிடக்கூடாது. பல்கலை மாணவர்களுக்கு உள்ள சமூகப்பொறுப்பை நல்வழியில் நாம் இவ்வாறான அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அவர்களுக்கு அனுபவ கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தி அவர்களும் கற்கும் போதே வருமானமீட்டும் வாய்ப்பினை வழங்குவது நல்லது. மாணவர்களை தொழில்முனைவோராக மாற்றும் மென்திறன் முறை கல்வியை போதிக்கும் நிலைமை ஏற்படவேண்டும்.

தனியே ஒரு துறையில் அறிவுடையவர்களாக மாணவர்களை உருவாக்காது பல்துறையிலும் தம்மை சமாளித்துக் கொள்ளும் திறனும் தாம் உயர்வடையும் தன்மையையும் உருவாக்க இது சிறந்த வாய்ப்பாகும். எமது இளஞ் சந்ததி போதைப்பொருளுடன் காலங்கழிப்பதை தடுக்கும் அனைத்து வழிகளையும் உருவாக்கி அவர்களை சிறந்த பிரஜைகளாக எமது சமூகம் போற்றும் சிறப்பானவர்களாக மாற்றிடும் பொறிமுறைக்குள் நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

முற்போக்கான தலைமைத்துவத்தில் எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பையும் செயற்பாட்டையும் அனைத்து திணைக்களங்களும் இணைந்த,சிறந்த,புரிந்துணர்வான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து எமது வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு வழிசெய்வோம். கிடைத்திருக்கின்ற நல்ல அரிய வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தகவல் தொழில் நுட்பம், கணனி அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு என்பன தற்போது அனைத்து தொழிற்றுறைகளுக்குள்ளும் உள்நுழைய ஆரம்பித்து விட்ட நிலையில் அதனை அனைத்து மக்களுக்கும் கிடைப்பதற்கான வழிவகைகளை நாம் செய்தல் வேண்டும். அனைவரும் இணைந்த சக்திநிலையே இதற்கு தேவையாகும். ஆரோக்கியமான கருத்தாடல்கள், அபிவிருத்தி பற்றிய அவதானிப்புகள், நேர்மையான சிந்தனைகள் அனைத்தும் எமது தேசத்தின் கட்டுமானத்திற்கு நிச்சயம் உதவும். வாரீர் இது எமக்கான காலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 945





தஞ்சாவூர் அரண்மனை யில் நந்தினி இவ்விதம் சிரிப்பதே யில்லை. இப்போது என்ன குதூகலம் வந்துவிட்டது. எதற் காகச் சிரிக்கிறாள் அவளுடன் சேர்ந்து சிரிப்பது யார்

உள்ளே பிரவேசித்ததும் உடன் இருந்தவள் மணிமே கலை என்று தெரிந்தது. இத னால் அவர் மனம் சிறிது தெளிந்தது. அவரைக் கண் டதும் மணிமேகலை சிரிப்பை அடக்குவதற்காக இரண்டு கை களினாலும் வாயைப் பொத்திக் கொண்டாள். அப்படியும் அட க்க முடியாமற் போகவே சிரித் துக் கொண்டே அந்த அறையை விட்டு ஓடிப் போனாள். நந்தினி யின் சிரிப்பு பழுவேட்டரை யரைக் கண்டதுமே நின்று விட் டது. அவளுடைய முகமும் வழ க்கமான கம்பீரத்தை அடைந் தது. "ஐயா! வாருங்கள்! யோசனை முடிவடைந்ததா?" என்றாள். "நந் தினி! அந்தப் பெண் எதற் காக அப்படிச் சிரித்தாள்? ஏன் சிரித்துக் கொண்டே ஓடுகிறாள்?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"அதைச் சொல்லத்தான் வேண் டுமா? சொல்லுகிறேன். சபாமண்ட பத்தில் நடந்த பேச்சுக்களில் கொஞ்சம் பக்கத்து அறையிலி ருந்த மணிமேகலையின் காதில் விழுந்ததாம். இளவரசர் ஆதி த்த கரிகாலர் பாட்டன்க ளைப் பற்றியும் பாட்டிக ளைப் பற்றி யும் பரிகாசமா கப் பேசியதைச் சொல்லி விட்டு அவள் சிரித் தாள்.." "சீ! துஷ்டப்பெண்! அவ ளோடு சேர்ந்து நீயும் சிரித் தாயே?"

"ஆம் அவளோடு சேர்ந்து சிரித்தேன். அவள் அப்பால் போனதும் அழலாம் என்று இருந்தேன். அதற்குள் தாங் கள் வந்து விட்டீர்கள்!" என்று நந்தினி கூறிவிட்டுக் கண் ணில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண் டாள்.

"ஆகா! உன்னை இப்பேர்ப் பட்ட மூடர்களின் மத்தியில் நான் அழைத்துக் கொண்டு வந்தது என் தவறு. நாளை பொழுது விடிந்ததும் நாம் தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போகலாம். இன்றிரவு மட் டும் பொறுத்துக் கொள்!" என்றார். "தஞ்சாவூருக்குப் புறப்பட வேண்டுமா ஏன்? வந்த காரியம் ஆகிவிட் டதா?" என்று நந்தினி கேட்டாள். அன்று சபா மண்ட பத்தில் நடந்த பேச்சின் முடிவுக ளைப் பழுவேட்டரையர் நந்தி னிக்குத் தெரியப்படுத்தினார்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு நந்தினி, "சுவாமி! தாங் கள் தஞ்சாவூருக்குப் போய் வாருங் கள் நான் வரமாட்டேன். ஆதி த்த கரிகாலனுக்கு புத்தி கற்பிக் கும் வரையில் நான் இங்கிருந்து புறப்படுவதாக உத்தேச மில்லை. அந்தக் கர்வம் பிடி த்த இள வரசன், ஒன்று தங்கள் காலில் விழுந்து அவன் பேசிய பரி காசப் பேச்சுக்களுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். அல்லது தங்கள் கத்திக்கு அவன் இரையாக வேண்டும்!" என்றாள்.

"நந்தினி! இது என்ன சொல் லுகிறாய்? இத்தகைய பாத கமான எண்ணம் உன் உள் ளத்தில் எப்படி உதித்தது." "ஐயா! எது பாதகமான எண் ணம்? என்னைக் கைப்பி டித்து மணந்த கணவனை ஒருவன் நிந்தித்துப் பேசி னால், அவ னைப் பழி வாங்க வேண்டும் என்று நான் நினைப்பது பாத கமா?"

(தொடரும்)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் 101ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி, பண் டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 101 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை, ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல் வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலை மையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வைத்திய நிபு ணர் சிவலிங்கராஜா ரகுராமன் மற்றும் யாழ்.போதானா வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி ஜனகா ரகுராமன் தம்பதிகள் ஆகியோரும், சிறப்பு விருந்தி னர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வித் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர் வேஸ்வரா மற்றும் திருமதி. சிவநயணி சர்வேஸ்வரா ஆகியோரும், கௌரவ விருந் தினர்களாக தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலா நிதி ஏகாம்பரநாதன் தேவநேசன் மற்றும் தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப் பாளர் வேலாயுதர் அரசகேசரி ஆகியோ ரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## பிரதேச அபிவிருத்தி கூட்டம் தொடர்பில் நல்லூர் பிரதேச சபை அதிரடி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்களில் அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களையும் பங்கெடுப்பதற்காக அழைப்பினை விடுக்காது இருப்பின் அக் கூட்டங்களினை முற்றாக புறக்கணிப்பது என நல்லூர் பிரதேச சபையில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் கூட்டம் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை தவிசாளர் ப.மயூரன் தலைமையில் நடைபெற்றது. அதன் போது, தவிசாளரி னால் கொண்டு வரப்பட்ட குறித்த தீர் மானம் சபையில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, தீர்மானம் நிறைவேற் றப்பட்டுள்ளது.குறித்த தீர்மானம் தொடர் பாக தவிசாளர் உரையாற்றும் போது,

நல்லூர் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தவிசாளர், உப தவிசாளர் ஆகியோருடன் வேறு கட்சிகளின் இரு உறுப்பினர் மட்டுமே பங்குபற்ற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சி சார் பில் பிரதிநிதிகளை அழைத்து பிரச்சி னைகளைக் கேட்பதற்கு பிரதேச அபி விருத்திக் குழுக் கூட்டம் ஒன்றும் கட்சி களின் செயற்பாடுகள் தொடர்பான கூட் டம் அல்ல. அது மக்களின் குறை நிறை களைத் தீர்க்கின்ற, பிரதேசங்களினை அபிவிருத்தி செய்கின்ற பிரதேச அபி விருத்திக் குழுக் கூட்டம். எனவே அதில் மக்களைப் பிரநிதித்துவப்படுத்துகின்ற அத்தனை மக்கள் பிரதிநிதிகளும் பங்கு பற்றுதல் அவசியமானது.

அப்போது தான் ஒவ்வொரு உறுப் பினர்களும் தங்கள் மக்கள் சார், பிர தேசம் சார் பிரச்சினைகளையும் தேவை களையும் தெரிவித்து பிரதேச அபி விருத்தி தொடர்பாக எடுக்கப்படும் முடிவு களுக்கு வலுச்சேர்க்க முடியும். எனவே நல்லூர் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கு கட்சி சார்பில் பிரதிநிதி களை அழைப்பதை விடுத்து நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர்கள் அனைவரையும் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

அவ்வாறு அனுமதி வழங்காது, ஒரு முழுமையற்ற வெறும் கண்துடைப்பிற்கு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்திற்கு அழைப்பு விடப்படுமாயின் அதனை நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர் உட்பட்ட அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்காமல் முற் றாகப் புறக்கணிக்கின்றோம் என் றார். (3-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 800 | 750 | 800 | 600 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 | -- |
| பச்சைமிளகாய் | 1000 | 1300 | 1500 | 1000 | 800 |
| தக்காளி | 600 | 550 | 700 | 600 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250 | 150 | 100 |
| கோவா | 300 | 300 | 350 | 400 | 250 |
| கரட் | 400 | 350 | 400 | 350 | 300 |
| பூசணி | 120 | 140 | 120 | 120 | 80 |
| புடோல் | 400 | 400 | 400 | 450 | 380 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 | 200 | 180 |
| சின்ன வெங்காயம் | 250 | 250-300 | 300 | 320 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | 200 | 230 |
| பாகற்காய் | 800 | 1000 | 1000 | 1500 | 800 |
| வெண்டக்காய் | 400 | 300 | 350 | 400 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 400 | 300 |
| பயற்றங்காய் | 700 | 650 | 600 | 600 | 250 |
| லீக்ஸ் | 350 | 450 | 450 | 450 | 370 |
| பீற்றூட் | 600 | 650 | 800 | 800 | 650 |
| கறிமிளகாய் | 1200 | 1100 | 1500 | 1400 | 1500 |
| முருங்கைக்காய் | 1500 | -- | 2000 | - | -- |
| போஞ்சி | 800 | 800 | 800 | 800 | 550 |
| கத்தரிதம்புள்ள | 700 | 650 | 600 | 600 | -- |
| கீரை – 1 பிடி | 180 | 120-250 | 200 | 250 | 180 |
| தேசிக்காய் | 600 | 600 | 300 | 250 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-180 | 120 |
| இராசவள்ளி | 600 | 700 | 450 | 500 | 475 |
| வெங்காயப்பூ | 1200 | 900 | 1000 | 800 | -- |
| முள்ளங்கி | 150 | 250 | 300 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 150 | 80 | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 100-150 | 100 | 200 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தவறுகளை உணரும் போது, அதை மீண்டும் செய்யாதிருக்கவும் உறுதி எடுக்க வேண்டும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அசமந்த மனநிலை வலுப்பெற்று வருகிறதா?

முல்லைத்தீவில் சிறுமி ஒருவர் உயிரிழந்த விவகாரம் இப்போது பேசு பொருளாகியுள்ளது.

தவிர, சிறுமியின் உயிரிழப்பிற்கு மருத்துவர்களின் பொறுப்பற்ற செயலே காரணம் என்ற குற்றச்சாட்டும் வலுப்பெற்றுள்ளது.

இந்நிலையில் இரண்டு மருத்துவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென நம்பலாம்.

இதற்கு அப்பால், சிறுமியின் உயிரிழப்புக்கு நீதி கோரி பொதுமக்கள் முல்லைத்தீவு வைத்தியசாலை முன்றலில் நேற்று முன்தினம் (29) கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

என்னதான் போராட்டங்கள், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டாலும் வாழ வேண்டிய அந்த அருமந்த பிள்ளை மீள வரப்போவதில்லை.

அப்படியாயின் பொதுமக்கள் நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்களும் அரச நிர்வாக மட்டத்தில் இடம்பெறுகின்ற விசாரணைகளும் இனிமேல் இப்படியான செயல்கள் நடந்துவிடக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்கானதாகும்.

எனினும் இவை கூட சம்பந்தப்பட்டவர்களின் மனநிலையை மாற்றும் போல் தெரியவில்லை.

ஆம், யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரு சிறுமியின் கை துண்டிக்கப்பட்டது முதல் மன்னார் வைத்தியசாலையில் ஒரு இளம் தாய் உயிரிழந்தது தொடக்கம் இப்போது முல்லைத்தீவில் சிறுமி ஒருவரின் மரணம் ஈறாக மருத்துவத் தவறுகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

இதை நாம் கூறும்போது, தவறுகளும் பொறுப்பற்ற தன்மைகளும் அசமந்தப் போக்குகளும் நம் மத்தியில் அதிகரித்துவிட்டது என்ற உண்மையை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

அதாவது, அரச பணி தொடக்கம் பல வீனமான தனியார் அமைப்புகள் வரையில் அசமந்தத் தன்மைகள் பெருகிவிட்டன.

இருந்தும் இந்த அசமந்தப் போக்கின் வெளிப்பாடு மனித உயிர்களுடன் சம்பந்தப்பட்டதன் காரணமாக மருத்துவத் துறையில் முதன்மை இடத்தைப் பெறுகிறது. உண்மையில் அசமந்தப் போக்குகள் அனைத்து அரச துறைகளிலும் உச்சமடைந்துள்ளதென்ற உண்மையை இங்கு கூறித்தான் ஆக வேண்டும்.

இதற்கு நல்ல உதாரணம் 2025 ஆம் ஆண்டிற்கான உயர்தரப் பரீட்சையின் போது, ஒரு குறித்த பாடத்தின் விடைத்தாளை அனுப்பாமல் விட்ட தவறு வடமாகாணத்தில் நடந்துள்ளது.

இதுபோல உரிய தகவல்களைத் தெரியப்படுத்தாமையால் பொதுமக்கள் அரச அலுவலகங்களுக்கு அலைந்து திரிகின்ற சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடந்தாகின்றன.

இங்குதான் சமகாலத்தில் அசமந்தமான மனநிலையுடன் கடமையாற்றுகின்ற மிக மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது உணர்தற்குரியது.

# செம்மணி வளைவுப் பகுதியில் அசைவ உணவகங்களுக்குத் தடை

## நல்லூர் பிரதேச சபை அதிரடித் தீர்மானம்

(கொக்குவில்)

யாழ்ப்பாணத்தின் நுழைவு வாயிலாகவும், புனித பூமியாகவும் கருதப்படும் செம்மணி வளைவுப் பகுதியில் சைவ சமயக் கலாசாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலான வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என நல்லூர் பிரதேச சபை அதிரடித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது

இப்பகுதியில் "நல்லூரான் செம்மணி வளைவு", சிவலிங்கம் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள் என சைவத் தமிழ் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் அடையாளங்கள் பல காணப்படுகின்றன.

எனவே இப்பிரதேசத்தின் புனிதத்தன்மையையும், கலாசார விழுமியங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் நேற்று செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தின் போது தவிசாளர் மயூரன் பிரேரித்த இந்த முக்கிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தின் பிரகாரம் செம்மணி வளைவுச் சூழலில் அசைவ உணவுகளை விற்பனை செய்யும் உணவகங்களை அமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. தங்குமிட வசதிகளுடன் கூடிய விடுதிகள் மற்றும் விருந்தகங்கள் போன்ற அந்தச் சூழலுக்குப் பொருத்தமில்லாத எந்தவொரு வணிக நிறுவனத்திற்கும் நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட செம்மணிப் பகுதியில் அனுமதி மறுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# குழிக்குள் விழுந்த சிறுவன் உயிரிழப்பு

(ஆனமடுவ)

புத்தளம் - ஆனமடுவ பகுதியில் வீட்டிற்கு அருகே வெட்டப்பட்டிருந்த கழிப்பறை குழிக்குள் விழுந்து 4 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுவன் பாட்டியின் வீட்டிலிருந்து தனது வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருந்த போதே, மழையினால் நீர் நிறைந்திருந்த கழிப்பறைக் குழிக்குள் சிறுவன் தவறி விழுந்துள்ளதாக தெரியவருகிறது.

சிறுவன் நீண்ட நேரமாகியும் வீட்டினை வந்தடையாமையை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே குழிக்குள் விழுந்து நீரில் மூழ்கிய நிலையில் அவர் மீட்கப்பட்டார்.

இதனையடுத்து சிறுவன் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின் மரணம் குறித்து நேற்று மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில்,

நீரில் மூழ்கியமையாலேயே மரணம் சம்பவித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

### எதிர்வரும் சனிக்கிழமை

# வவுனியாவில் கூடுகிறது தமிழ் அரசின் அரசியல் குழு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (03) வவுனியாவில் நடைபெறவுள்ளது.

ஆண்டின் முதலாவது கூட்டமாக அமையவுள்ள இக்கூட்டத்தில் 2026 இல் மாகாண சபை தேர்தலை நடாத்துவதற்கான அழுத்தங்களைப் பிரயோகித்தல் மற்றும் அவ்விடயம் சார்ந்து முன்னெடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளதாக அறியமுடிகின்றது. (ம-7)

### உயிரைக்குடித்த வீடியோ மோகம்

# மோ. சைக்கிள் விபத்து உயர்தர மாணவன் பலி

புத்தளம், நாத்தாண்டிய பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி, உயர்தரத்தில் கணிதப்பிரிவில் கல்வியைக் கற்று வந்த 18 வயதுடைய மாணவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சமீபத்தில் தான் வாங்கிய புதிய மோட்டார் சைக்கிளில் பயணித்தவாறு அதனை வீடியோவாகப் பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்ற முயன்ற குறித்த மாணவன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவாறே ஒரு கையால் வீடியோ எடுத்தபோது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து நிலைதடுமாறிய மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் இருந்த தொலைபேசிக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மாணவன் உடனடியாக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

# புன்னை நீராவிப் பகுதியில் பட்டப்பகலில் திருட்டு

## சந்தேகநபர் 24 மணிநேரத்தில் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புன்னை நீராவிப் பகுதியில், வீடொன்றினுள் பட்டப்பகலில் புகுந்து தங்க நகைகள் மற்றும் பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் நேற்று (30) கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் (29) பகல் வேளையில் குறித்த வீட்டின் உரிமையாளர் இல்லாத சமயம், வீட்டிற்குள் இருந்த சுமார் 23 இலட்சத்து 2,500 ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 60 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் திருடப்பட்டுள்ளதாகத் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் துரிதமாகச் செயற்பட்ட தருமபுரம் பொலிஸார், 24 மணிநேரத்துக்குள் கிளிநொச்சிப் பகுதியில் வைத்து யாழ்ப்பாணம் ஏழாலைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபரைக் கைது செய்தனர். சந்தேக நபரிடமிருந்து 4 மோதிரங்கள், 1 சோடித் தோடு, 1 சங்கிலி, 41,860 ரூபாய் ரொக்கப் பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக நகைகள் மற்றும் எஞ்சிய பணத்தை மீட்கும் பொருட்டும், இச்சம்பவத்தில் வேறு யாருக்கேனும் தொடர்புள்ளதா? என்பது குறித்தும் தருமபுரம் பொலிஸார் துரித விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ம-7,316)

# சுண்டிக்குளப் பகுதியில் பேருந்து மீது கல் வீச்சு

முல்லைத்தீவில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து மீது இனந்தெரியாத நபர்கள் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் சுண்டிக்குளம் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் பேருந்தின் பின்பக்கக் கண்ணாடி பலத்த சேதமடைந்தது.

தாக்குதலைத் தொடர்ந்து, பயணிகள் அனைவரும் மற்றொரு பேருந்து மூலம் கிளிநொச்சி நோக்கி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தனிப்பட்ட காரணங்களுக்காக நடத்தப்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம்பெற்றதா? என்பது குறித்து தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## சங்கடங்கள் விலகும் ஆண்டாக அமையும்



**எதிலும் வெற்றி வாகை சூடும் மிதுன இராசியினரே! தொடங்கப் போகும் 2026 ஆம் ஆண்டு துக்கம், துயரம், சங்கடங்கள் விலகும் ஆண்டாக அமைய நல் வாழ்த்துக்கள்!**

உழைப்பிற்கான உன்னத பலனை அடையக்கூடிய அற்புதமான வருடம். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் கூடும். உங்களின் தனித் திற மைகளை வெளிப்படுத்தக்கூடிய சிறப்பான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். உங்களுக்குள் மறைந்து கிடந்த திறமைகளை உணரப் போகிறீர்கள். பெயர், புகழுடன் வாழும் அமைப்பு உண்டாகும். உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். புத்திக் கூர்மை அதிகரிக்கும். எதிர்காலம் பற்றிய பய உணர்வு நீங்கும். திட்டமிட்டுச் செயற்பட பணம், புகழ், அந்தஸ்து, கௌரவ பதவி, பதவி உயர்வு போன்ற நியாயமான ஆசைகள் அனைத்தும் ஈடேறும்.

**குருவின் சஞ்சார பலன்கள்**

ஆண்டின் தொடக்கத்தில் இராசியில் இருக்கும் குரு பகவான் 02.06.2026 முதல் தனம் வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு செல்கிறார். 2026 ஆம் ஆண்டில் பொருளாதார மேன்மை அடையக்கூடிய இராசிகளில் மிதுன ராசியும் ஒன்றாகும். முயற்சிகளில் எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெறுவீர்கள். ஆண்டு முழுவதும் பொருளாதாரத்தில் மேன்மையான பலன்கள் இருக்கும். கமிஷன் அடிப்படையான தொழில்கள், பேச்சை மூலமாகக் கொண்ட தொழில்கள் தொடங்குவதற்கு இது நல்ல காலமாக இருக்கும். பணவரவு சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் நெருக்கடிகள் சற்று குறையும். வாக்கு வன்மையால், பண பலத்தால் விரும்பியதை சாதித்துக் கொள்வீர்கள். பங்கு வர்த்தகர்களுக்கு மிகச் சாதகமான காலம். அரசாங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய பணிமாற்றம் கிடைக்கும்.

சிலருக்குப் பணிக்காலம் முடிந்த பிறகும் பதவி நீடிப்புகள் ஏற்படலாம். சிலருக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும். பகைமை பாராட்டிய உறவுகள் தற்போது பக்க பலமாக இருப்பார்கள். கணவன் மனைவி ஊடல் கூடலாக மாறும். இறை வழிபாட்டால் மகிழ்ச்சி உண்டாகும். உடன் பிறந்தவர்கள் மற்றும் நட்பு வட்டாரத்தில் நிலவிய மனக்கசப்பு மாறும். பழைய வீட்டைப் புதுப்பிப்பீர்கள். பொழுது போக்கான விருந்து விழாக்களில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் திரு மணம், கல்வி போன்ற சுப நிகழ்விற்கு எதிர்பார்த்திருந்த தொகை கிடைத்து பணவரவு சரளமாகும்.

**சனியின் சஞ்சார பலன்கள்**

மிதுன இராசிக்கு 8,9 ஆம் அதிபதியான சனி பகவான் கோட் சாரத்தில் இராசிக்கு பத்தாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இந்த ஆண்டு முழுவதும் அவர் தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பார். தொழில், உத்தியோகத்தில் நல்ல வாய்ப்புகள் கிடைத்து படிப்படியான முன்னேற்றம் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கு விண்ணப்பித்த கடன், பண உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் நல்ல வாய்ப்புகள் தடையின்றி கிடைக்கும். சிலர் புதிய வேலை வாய்ப்பிற்காக வெளியூர், வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் உண்டாகும். அரசு உத்தியோக முயற்சி கைகூடும். எதிர்பார்க்கும் பதவி உயர்வுகள் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சமூக அந்தஸ்து உயரும் அற்புதமான நேரம். பிறருக்கு உதவுவதில் ஆர்வம் அதிகரிக்கும். திருமணம், குழந்தை பாக்கியம், வீடு, வாகன யோகம், சொத்து மதிப்பு உயர்தல், தொழில் முன்னேற்றம், புதிய வேலை வாய் ப்பு என்று எல்லாவிதமான நன்மை களையும் அடைவீர்கள். குடும்ப உறவுகளின் அனுசரணையால் அனைத்து பிரச்சினைகளும் கானல் நீராக மறையும். சிலரது காதல் பிரிவினையில் முடியும். வாழ்க்கைத் துணையால் ஏற்பட்ட இடையூறுகள் குறையும். தாத்தா பாட்டியை சந்தித்து நல்லாசி பெறுவீர்கள்.

**ராகு/கேதுவின் சஞ்சார பலன்கள்**

2026 ஆம் ஆண்டில் கேது பகவான் 3 ஆம் இடமான வெற்றி ஸ்தானத்திலும், ராகு பகவான் 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திலும் சஞ்சரிப்பார்கள். ஆண்டின் இறுதியில் டிசம்பர் மாதம் 5ஆம் நாள் கேது பகவான் தனம் வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கும் ராகு பகவான் அஷ்டம ஸ்தானத்திற்கும் பெயர்ச்சியாகிறார்கள். ஒரே நேரத்தில் பல விதமான வாய்ப்புகள் வந்து சேரும். எனவே தகுந்த ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பது நல்லது. பூர்வீகச் சொத்தில் சித்தப்பா மற்றும் மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட குழப்பங்கள் முடிவிற்கு வரும். தந்தையுடன் சுமாரான உறவே இருக்கும். பணம் சம்பாதிக்கும் சிந்தனையுடனே இருப்பீர்கள். குழந்தை பாக்கியத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் வைத்தியத்தில் சீராகும்.

பிள்ளைகளின் திருமணம், குழந்தை பாக்கியம், உத்தியோக, தொழில் அனுக்கிரகம் மன நிம்மதியைத் தரும். சிலர் புதிய வாகனம் வாங்கலாம். சிலருக்கு நிலம், வீடு போன்ற சொத்துச் சேர்க்கை உண்டாகும். கை,கால், மூட்டு வலியால் ஏற்பட்ட அவதியிலிருந்து விடுதலை உண்டாகும். சிலர் குறுக்கு வழியில் அதிஷ்டத்தை தேடி அலைவார்கள். பொது வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு சமூக அந்தஸ்த்தை நிலைப்படுத்தும் கௌரவப் பதவிகள் கிடைக்கும். தியாக மனப்பான்மை மிகுதியாகும்.

**மிருகசீரிடம் 3, 4**




அனைத்து விதமான செயல்களிலும் அனுகூலமான பலன் உண்டாகும் வருடம். மகிழ்ச்சியான, நிம்மதியான மன நிலையில் இருப்பீர்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். நெருக்கடியாக இருந்த பிரச்சினைகள் நீங்கும். உங்கள் வாக்கிற்கு மதிப்பும், மரியாதையும் உண்டாகும். ஆசிரியர் பணி மற்றும் பேச்சை மூலதனமாக கொண்டவர்களுக்கு மேன்மை உண்டாகும். பல வழிகளில் வருமானம் வந்து மனதை மகிழ்விக்கும். பொருளாதாரத்தில் தன்னிறைவு உண்டாகும். தாய் வழி உறவுகளுக்கு கொடுக்க வேண்டிய பாக்கியை செலுத்துவீர்கள்.

நிதி நெருக்கடிகள் நீங்கும். அதே வேளையில் சுபச் செலவுகளும் அதிகமாகும். தடைப்பட்ட சுப காரியங்களும் முக்கிய பணிகளும் சுலபமாக நடந்து முடியும். விருப்ப திருமணத்திற்கு தந்தையின் ஆதரவு கிடைக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். ஆரோக் கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு வீண் அலைச்சல், டென்ஷன் ஏற்படும். மறு திருமணத்தால் ஏற்பட்ட மனச் சங்கடம் நீங்கும். சொந்த வாழ்க்கையை விட பொது வாழ்வில் நாட்டம் அதிகரிக்கும். விஷ்ணு காயத்திரி படிப்பது நல்லது.

**திருவாதிரை**

விரும்பிய மாற்றம் தேடி வரும் வருடம். மனதும் உடலும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருக்கும். திடீர் செயற்பாடுகள் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். பணவரத்து திருப்தி தரும். தடைபட்ட பண வரவு சீராகும். வாங்கிய பணத்தை திரும்ப கொடுக்காமல் இழுத்தடித்தவர்கள் வீடு தேடி வந்து பணத்தை கொடுப்பார்கள். சிலருக்கு எதிர் பார்த்த பதவி உயர்வு, இடமாற்றம் கிடைத்து குடும்பத்துடன் இணையும் வாய்ப்பு உள்ளது. உடன் பிறந்தவர்கள், பங்காளிகளிடம் அனுசரித்துச் சென்றால் பூர்வீக சொத்து தொடர்பான பிரச்சனைகள் தீரும்.

ஒரு பெரிய பணம் சொத்து விற்பனையில் கிடைக்கும். வேலையில் பதவி உயர்வுகளை அடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளது. நவீன கரமான பொருட்களை வாங்கும் வாய்ப்பு உள்ளது. பெண்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் நிலவிய அசௌகரியங்கள் நீங்கும். தொழில், வேலையில் சில இடர்கள் வந்தாலும் அதைப் பொருட்டாக மதிக்காமல் முன்னேறுவீர்கள். புதிய நட்பு வட்டாரம் உருவாகும். நன்மையும் தீமையும் கலந்த வருடமாகவே இருக்கும் என்பதால் ஒரு செயலில் இறங்கும் முன்பு பலமுறை யோசிக்க வேண்டும். தினமும் நடராஜரை வழிபடுவதால் நன்மைகள் கூடும்.

**புனர்பூசம் 1,2,3**

மிதுன ராசி புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இது மிக மிக யோகமான காலம் என்றால் அது மிகைப்படுத்தலாகாது. எடுக்கும் முயற்சிகளுக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். குலத் தொழில் செய்பவர்களுக்கு தொழில் வளர்ச்சி பல மடங்காகும். தொழிலில் பிறர் ஆச்சரியப்படும் வகையில் கணிசமான லாபம் கிடைக்கும்.

சட்ட ரீதியான நெருக்கடிகள் நீங்கும். கடனாக கொடுத்திருந்த பணம் திரும்பக் கிடைக்கும். சிலருக்கு அத்தை அல்லது சித்தியின் மூலம் அதிஷ்ட சொத்து அல்லது பணம் கிடைக்கும்.

வேலையின்மையால் அவதிப்பட்டவர்களுக்கு அரசு, தனியார் துறையில் நல்ல வேலை கிடைக்கும். நோய் தொல்லை குறையும். இளைய சகோதர, சகோதரி மூலம் நிலவிய குழப்பங்கள் நீங்கி ஒற்றுமை மேலோங்கும். பெண்களுக்கு பிறந்த வீட்டுச் சொத்து கிடைப்பதில் நிலவிய சட்டச் சிக்கல் மறையும். அரசின் உதவித் தொகை கிடைக்கும். சொத்து வாங்கும், விற்கும் முயற்சி சாதகமாகும். உயர் கல்வி முயற்சி கைகூடும். குழந்தைகளின் மந்த தன்மை நீங்கும். தடைப்பட்ட குல தெய்வ வேண்டுதல்கள் நிறைவேறும். பித்ருக்கள் வழிபாட்டில் ஆர்வம் மிகும். ஸ்ரீராமர் வழிபாட்டால் மேன்மை பெற முடியும்.

**பரிகாரம்:** மிதுன ராசியினர் மீனாட்சி அம்மனை வழிபடுவதால் ஏற்றம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நஷ்டஈடு...

வில்லை. உரிய தீர்வினையே கேட்கின்றோம் என தையிட்டி காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டவிரோத தையிட்டி விகாரை தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். விகாரை உள்ள காணிக்கான உறுதிகள் அரச அதிகாரிகளிடம் எம்மால் பல தடவைகள் வழங்கப்பட்டுள்ளன. அமைச்சர் சந்திரசேகர் காணி உறுதிகள் சரிபார்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார்.

ஆளுநர், அரச அதிபர், பிரதேச செயலாளர்களிடம் காணி உறுதி வழங்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு அவை மக்களின் காணி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வகையில் மக்களின் காணி என ஏற்றுக் கொள்கிற அமைச்சர் தற்போது மாற்றுக் காணி என்று கதைக்கிறார். நாங்கள் மாற்றுக் காணியையோ நஷ்டஈட்டையோ கேட்கவில்லை.

இவர்கள் மாற்றுக்காணி என்று எதைச் சொல்லுகிறார்கள். மாற்றுக் காணியை எங்கு வழங்கப் போகிறார்கள்? இவர்கள் காக்கைதீவிலும் மாற்றுக் காணியை வழங்கக்கூடும். அங்கு வாழ முடியாது.

காணிகளை இழந்த எங்களுடன் கலந்துரையாடாமல் புத்த பிக்குவுடன் கலந்துரையாடி காணிகளை விடுவிக்கப் பேசுகிறார்கள். அரசாங்க அதிபர் தனது வாகனத்தில் இருந்த அரச அதிபர் என்ற பலகையை தூக்கிவிட்டு அமைச்சர் சந்திரசேகர் மற்றும் இளங்குமரனுடன் சென்று புத்த பிக்குவுடன் பேசுகிறார்.

அரச பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நாம் தொடர்பு கொள்ள முயற்சித்தும் அவர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு இந்தக் காணிகள் தொடர்பில் தெளிவான விளக்கம் இல்லை.

அரச அதிபரும் ஆளுநரும் எம்மை அழைத்து பேசி இந்தக் காணிப் பிரச்சினையைத் தீர்க்கலாம். ஆனால் அவர்கள் உள்நோக்கத்துடன் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை.

காணியை பிக்கு விட்டுத் தருவதாகச் சொன்னதாகச் சொல்கிறார்கள். நீங்கள் காணிகளை விட்டுக் கொடுக்கத் தேவையில்லை. நீங்கள் அடாத்தாகப் பிடித்து வைத்துள்ளீர்கள். உங்கள் தேவையை எம்மிடம் கூறுங்கள். எவ்வளவு தேவை என்பதை நம்மிடமே கதைக்க முடியும். இந்த நிமிடம் வரையும் எங்களுடன் கதைக்கவில்லை.

இலங்கை சுதந்திரம் அடைய முதல் இருந்த காலத்தில் குறித்த தையிட்டிக்கான உறுதி எம்மிடம் உள்ளது என்றனர். (ம-7,33)

## மறுக்கப்படும்...

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டியில் ஜனநாயக ரீதியாகப் போராடியவர்கள் கைது செய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்தும், வவுனியா உட்பட வடக்கு கிழக்கில் புதிதாக அமைக்கப்படும் விகாரைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்கள்,

சட்டவிரோதமாகத் தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடியவர்கள் மிலேச்சத்தனமாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு மதகுரு என்று கூடப் பாராமல் மோசமான முறையில் வேலன் சுவாமி நடத்தப்பட்டிருந்தார். இது தமிழ் மக்கள் மீதான ஒரு அடக்கு முறைச் செயற்பாடாகவே உள்ளது.

வடக்கில் குருந்தூர் மலை, வெடுக்குநாறி மலை, தையிட்டி தற்போது வவுனியா கல்லுமலை என்பன ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளன. பௌத்த துறவிகளே இப்படியான கலவரங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக உள்ளனர். எனவே மறுக்கப்படும் எமது உரிமைகளை அடைவதற்காக நாம் தொடர்ச்சியாகப் போராட்டங்களைச் செய்வோம் என்றனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரிய பதாதைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (ம-7,250)

## தையிட்டி...

யுள்ளேன் என யாழ்.நாக விகாரையின் விகாராதிபதி விமலதர்ம தேரர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி, பொதுமக்களின் காணி என நீதி அமைச்சர், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத் தரப்புக்களுக்கு நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இந்தப் பிரச்சினையை அரசியலாக்கி முரண்பாடுகளை வளர்க்க வேண்டாம் என தமிழ், சிங்கள மக்களிடம் கோருகிறேன். காணிகளை காணி உரிமையாளர்களிடம் கையளிக்க வேண்டும்.

அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை எனத் தெரிவித்தார். (ம-7,33)

## 3 இந்...

பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து படகு ஒன்றையும் இலங்கை கடற்படை கைப்பற்றியுள்ளது. (ம-7)

## பிர...

யாழ்ப்பாணத்தில் 4 கிலோ 800 கிராம் கஞ்சாவுடன் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் போதைப்பொருளை போதை வியாபாரி ஒருவரிடம் கஞ்சா போதைப் பொருளை கைமாற்றம் செய்ய போதைப் பொருளுடன் பயணிப்பதாக யாழ்ப்பாண பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவிற்கு அண்மையாக வைத்து அந்நபரை மடக்கிப்பிடித்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில், அவரது உடைமையில் இருந்து 4 கிலோ 800 கிராம் கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

அதனையடுத்து அவரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை தான் பிரதேச சபையின் உறுப்பினர் எனவும், வெளிநாட்டில் இருந்து வந்த ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில், ஒரு நபரிடம் இருந்து இதனைப் பெற்று, யாழ்.நகர் பகுதிக்கு வரும் ஒருவரிடம் அதனைக் கையளிக்கச் சென்றதாகக் கூறியுள்ளார்.

குறித்த நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதேவேளை, குறித்த நபரிடம் கஞ்சா போதைப்பொருளை கொடுத்தவர் மற்றும், அதனை வாங்கக் காத்திருந்தவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)


மஹஜன சம்பத
திகதி 2025.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 6059
G 1 5 5 1 0 3
அத சம்பத G 5 1 0 3
சீட்டிழுப்பு இலக்கம் 0634
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 175
மகரம் 14 41 45
3489

தன நிதானய
திகதி - 2025.12.30
சீட்டிழுப்பு இலக்கம் - 2089
L 12 55 56 74 L

மெகா பவர்
திகதி 30/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2407
N 19 01 17 38 50

ஜய ஜய
திகதி 2025.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 0327
S 3 0 1 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4301
சீட்டிழுப்பு திகதி 30.12.2025
P 26 31 41 55
P
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 1368
இடபம் 06 22 24 59 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.12.2025 வெற்றி வாரம் 0767
V 5 4 4 4 7 7
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.31,674,566.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3033
சீட்டிழுப்பு திகதி 2025.12.30 தினம் செவ்வாய்க்கிழமை
30 33 35 55 F
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 85,512,561.60
DLB

சனிதா
திகதி 30.12.2025 வெற்றி வாரம் 5194
07 09 44 75 U
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ. 50,316,205.20
DLB

சசிரி
வெற்றி வாரம் 863
சீட்டிழுப்பு திகதி 30.12.2025
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 34 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4745
சீட்டிழுப்பு திகதி 30.12.2025 தினம் செவ்வாய்க்கிழமை
02 26 41 55 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.3,324,778.40
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 08 14 43 57 72
சீட்டிழுப்பு வாரம் 2209
30.12.2025 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.616,725,860.40
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2859
சீட்டிழுப்பு திகதி: 2025.12.30
அடுத்த சுப்பர் ஜக்போட் ரூ.72,643,763.20
09 11 29 41 N
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில்
இரண்டாவது காணியாக நீர்வேலி வடக்கு
வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயிலுக்கு
அண்மையில் 4 பரப்பு 15 குளி அளவுடைய
மேட்டுக்காணி உடன் விற்பனைக்குண்டு. (6434)

தொடர்புகளுக்கு: **077 436 6704**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## Voyzant இந்தியா கோவில்கள்

- ஆறுபடை வீடு
- சிதம்பரம்
- திருவண்ணாமலை
- திருவானைக்கா
- திருப்பதி
- ஸ்ரீரங்கம்
- மதுரை மீனாட்சி
- காஞ்சிகாமாட்சி
- திருநாகேஸ்வரம்
- வைத்தீஸ்வரன்
- திருவெண்ணெய்நல்லூர்
- ராமர்கோவில்
- இராமேஸ்வரம்
- மேல்மருவத்தூர்
- சங்கரப்பாணி
- திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்

**189,000/=** (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)

இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து – தங்குமிடம்

10 நாட்கள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd

புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866

(நிபந்தனைகளுக்குட்பட்டது) (5308)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 230/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 1 |
| 1Kg செத்தல் NO 1 | - 850/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை | - 210/= | Max 5 Kg |
| 01 குட்நைட் நுளம்புதிரி | - 135/= | ~~160/=~~ |
| 01 சந்தூர் சோப் | - 128/= | ~~165/=~~ |
| 70g பேபி சோப் | - 125/= | ~~145/=~~ |
| 01 ஓசன் மீன்ரின் | - 430/= | ~~480/=~~ |
| 01 மைலோ பால் | - 105/= | ~~130/=~~ |




MAX 01 ~~1200~~ 1139 400g Anchor




~~320~~ 280 1Kg சவர்க்காரம் பவுடர்

தரமான பொருட்களை சிறந்த
விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk இனை நாடவும். (1870)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கரவெட்டி நெல்லியடி சிக்னல்
சந்தியிலிருந்துகொடிகாமம் பிரதான
வீதியில் 500m தூரத்தில் 18 பரப்புக்
காணி இரண்டு பரப்பாக பிரித்து தரப்படும்.
குடியிருப்புச் சூழல், நன்னீரூற்று
வளங்கள் உண்டு. இந்தக் காணிகளை
மொத்தமாகவும் இரண்டாகவும்
பிரித்தும் தரப்படும்.
இன்னும் சில துண்டுகளே விற்பனைக்குள்ளது. (6425)

தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:
**077 639 4409, 076 153 2094**

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு அருகாமை.
- 24 அடிப்பாதை.
- ஊரெழு பிள்ளையார் கோயிலடியில் இருந்து 1 Km தூரம்.
- 1 பரப்பின் விலை – 27 00 000 /= இருபத்தேழு இலட்சம் ரூபா
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (6437)

தொடர்பு: **074 018 8731**
**075 412 9203**


## 3 ஆம் ஆண்டு நினைவுநாள்



### சிவசுந்தரம் வர்ஷனன்

31.12.2025

வலுவிழந்து வாடுகின்றோம் வர்ஷனா
உன்திடமான செய்கையெல்லம் நெஞ்சில்
நிலைத்து நின்று எந்நாளும் நெருடுதடா
கலைந்தோடிப் போனதுவோ கனவுகளும்
வளமான வாழ்வுக்கு வழிவந்தும்
விதியாலே எங்கள் குலக்கொழுந்து
கொடிதாவி மூன்றாண்டு கடந்தாலும்
விழியாலே வழிபார்த்து நிற்போம் ஐயா...

"வர்ஷ மஹால்"
23, உடுவில் வீதி,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா,
மைத்துனன் மற்றும் உறவினர்கள். (1829)

## போக்குவரத்து சேவைக்கான விலை மனுக்கோரல்

கிளிநொச்சி மாவட்டத்தின், சகல பிரதேசங்களிலும் இறுதிக்கால பராமரிப்பில் உள்ள நோயாளர்களின் வீடுகளில் நடமாடும் மருத்துவ சேவையினை வழங்குதலுக்காக HIACE ரக வாகனமொன்றினை மாதாந்த வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கான விலை மனுக்கோரலுக்காக இவ்விளம்பரம் பிரசுரிக்கப்படுகிறது.

குறித்த வாகனம் 2014ம் ஆண்டுக்குப் பின்னர் உற்பத்தி செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும். வாகனத்திற்குரிய எரிபொருள், பராமரிப்பு, சாரதி கொடுப்பனவு அனைத்தையும் உள்ளடக்கியதான விலையை குறிப்பிடவும். வாகனம் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டதாகவும், நல்ல நிலையிலும் இருத்தல் வேண்டும்.

பின்வரும் விடயங்களை உள்ளடக்கி, தெளிவான விண்ணப்பத்தை தயார் செய்து அனுப்பவும்.

| | | |
|---|---|---|
| 1. | உரிமையாளரின் முழுப்பெயர் | |
| 2. | முகவரி | |
| 3. | தொலைபேசி இலக்கம் | |
| 4. | சாரதியின் பெயர் | |
| 5. | மாதத்தில் ஆகக் கூடுதலாக 22 நாட்கள் வரையில் சேவை வழங்கல் வேண்டும். (ஆம்/இல்லை) | |
| 6. | காலை 08.00மணி முதல் மாலை 04.30 வரையில் சேவை வழங்கல் வேண்டும், (ஆம்/இல்லை) | |
| 7. | வாகனம் குளிரூட்டப்பட்டதாக இருத்தல் வேண்டும் (ஆம்/இல்லை) | |
| 8. | சாரதிக்கு ஏற்கனவே அலுவலக பாவனைக்காக வாகனம் செலுத்திய அனுபவம் (ஆம்/இல்லை | |
| 9. | மாதத்தில், 1800km இலும் குறைவான தூரம் பயணித்தால், ஒவ்வொரு கிலோமீற்றருக்கான விலைகோரலை குறிப்பிடவும். | |
| 10. | மாதத்தில் 1801km முதல் 2,000km வரையில் பயணித்தால், அதற்குரிய மொத்த விலை கோரலை குறிப்பிடவும். | |
| 11. | மாதத்தில் 2,000km இலும் கூடுதலான தூரம் பயணிக்க நேரின், மேலதிக ஒவ்வொரு கிலோமீற்றருக்கான விலைகோரலை குறிப்பிடவும். | |

முக்கிய குறிப்பு : விண்ணப்பத்துடன் வாகனப் பதிவுப் புத்தகப் பிரதியையும் சேர்த்து 15.01.2026 க்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடிய வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விலை மனுக்கோரல்" எனக் குறிப்பிடவும்.

செயலாளர் - முகாமைத்துவ சபை
CANE - SRI LANKA
No 05, சுவாமிப்பிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம். (C-4706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல. 131, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.